184

ஐக்கிய அரசு

ஜூலை 1934

JL
VINMN347K
N341.7
148730

# ஐக்கிய அரசு

(184)

(CO-OPERATIVE COMMONWEALTH)

STANDS FOR

BETTER FARMING, BETTER BUSINESS, BETTER LIVING.

1934 ஜூலை திருச்சி

1 OCT 1934

## கூட்டுத் தேர்தலும் கூட்டுறவு இயக்கமும்

தனித்தொகுதி நல்லதா? கூட்டுத் தொகுதி நல்லதா? என்பது நாட்டில் அரசியல்வாதிகளிடையே நடந்துவரும் பெருத்த தோர் விவாதமாகும். கூட்டுத் தொகுதி முறை நாட்டிற்கு நலனளிக்கும், தனித் தொகுதி முறையால் நாட்டின் நலத்திற்குப் பங்கம் ஏற்படும் என்பது பெரும்பாலோர் அபிப்ராயம். கூட்டுத் தொகுதியால் உண்டாகும் நன்மை என்ன? தனித்தொகுதியால் விளையும் தீமை என்ன? என்று கவனித்தால் பெரும்பாலோரது அபிப்ராயத்தின் உண்மை விளங்கும். பல்வேறு மதத்தினரும், ஜாதியினரும், வகுப்பினரும், பாஷையினரும் நிறைந்தது நம் நாடாகும். உதாரணமாக ஹிந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள் ஆகியோரை எடுத்துக்கொள்வோம். சட்ட சபைகளிலோ, ஸ்தல ஸ்தாபனங்களிலோ இவர்களுக்கு தனித்தொகுதி முறை ஏற்படுத்தப்படும் பக்ஷத்தில் ஹிந்துகள் தங்களைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளுவார்கள்; முஸ்லீம்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்வர். கிறிஸ்துவர்களின் பிரதிநிதிகள் அவர்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுவர். இதனால் ஹிந்துக்கள் முஸ்லீம்களிடமோ, முஸ்லீம்கள் கிறிஸ்துவர்களிடமோ, கிறிஸ்துவர்கள் ஹிந்துக்களிடமோ செல்வதற்கில்லை. ஒருவரை ஒருவர் சந்திப்பதற்குமில்லை. ஒருவருடைய நல்லெண்ணத்தை மற்றவர் பெற வேண்டுமென விரும்ப சிறிதும் இடமே இல்லை. மதக்கட்டுப்பாடு காரணமாக இம்மூவரும் பிரிக்கப்பட்டிருப்பது ஒருபுறமிருக்க தனித் தொகுதி அரசியல் அமைப்பு இம்மூவரையும் ஒருவரை ஒருவர் தீண்டத் தகாதவர்களாகக் கருதக்கூடிய நிலையில் கொண்டு வந்து விடுகிறது. ஆனால், கூட்டுத் தொகுதி முறையில் இதுபோன்ற தீமைக்கு இடமில்லை. எனினும் ஓர் ஆபத்தும் உள்ளது. அதாவது, கூட்டுத்தொகுதி முறையில் பெரும்பான்மையான எண்ணிக்கையை உடைய சமூகத்தார் சிறு பான்மையோரை தலைதூக்க வொட்டாது தடைசெய்ய முடியும். தனித்தொகுதி முறையில் விளையும் தீமையைப் போக்கவும், கூட்டுத்தொகுதி முறையால் ஏற்படக்கூடிய ஆபத்தைத் தடுக்கவுமே பிரத்தியேக ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்ட கூட்டுத்தேர்தல்முறை சிலாக்கியமென சொல்லப்படுகிறது. இம்முறை பெரும்பாலும் அறிவாளிகளால் ஏற்கப்படுகிறது. பிற்போக்காளர்களையும், முற்போக்கான அபிப்ராயமுடையவர்களையும் இம்முறை ஒன்றுபடுத்துகிறது. இம்முறையினால் பெரும்பான்மையோர் சிறுபான்மையோர் தயவை எதிர் பார்க்கவும்,

சிறுபான்மையோர் பெரும்பான்மையோர் நல்லெண்ணத்தை சம்பாதிக்கவும் நேரிடுகிறது. தேர்ந்தெடுக்கப்படக்கூடிய நபரும் இரு சாரார்களின் விருப்பத்திற்கு ஒத்தவராக இருக்கமுடியும். இம்முறையால் எவரது நலத்திற்கும் பங்கம் விளையாதென்பதுடன் இரு சாராரும் பரஸ்பரமாக ஒத்துழைக்க நேரிடும். ஒரு வகுப்பார் மீது மற்றொரு வகுப்பாருக்குள்ள அவநம்பிக்கை ஒழியும் வரையில் இம்முறை சிறந்ததெனலாம். அரசியல் உலகில் முக்யமான பிரசினையாக இருந்துவரும் கூட்டுத்தேர்தல், தனித்தேர்தல் என்பது கூட்டுறவு இயக்கத்திலும் மிக முக்யமான பிரசினையாக எழுந்துவிட்டது. தீர்வும் விரைவில் கிட்டும் என்போம்.

148730

இதுசமயம், திருச்சி ஜில்லா மத்திய கூட்டுறவு பாங்கிலே பங்குத்தொகை எடுத்த தனித்த பங்காளர்களென்றும், கிராமச் சங்கத்தார்களென்றும் இருசாரார் பங்காளர்களாக இருந்து வருகின்றனர். இவ்விரு சாராரில் தனித்த பங்காளர்கள், தாங்கள் பாங்கில் பணத்தைப் போட்டிருப்பதாகவும், பணத்திற்கு பக்கவான பாதுகாப்பு வேண்டுமென்றும், அது குறித்துத் தங்களுக்கு நிர்வாக சபையில் விசேஷ பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென்றும் விரும்புகின்றனர். ஆனால் கிராமச் சங்கத்தார் தங்களால்தான் லேவாதேவி நடக்கிறதென்றும், பாங்கின் பணப் பெருக்கிற்குத் தாங்களே காரணமென்றும், எனவே தங்களுக்கு நிர்வாக சபையில் போதிய பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென்றும் நினைக்கின்றனர். இது காரணமாகவே தற்சமயம் பாங்கின் நிர்வாக சபையில் தனித்த பங்காளருக்கு 20 ஸ்தானமும் கிராமச்சங்கத்தாருக்கு 20 ஸ்தானமும் இருந்து வருகிறது. இவ்வாறு வழங்கப்பட்டுள்ள ஸ்தானம் தனித்த பங்காளர்களின் எண்ணிக்கையையும், சங்கங்களின் எண்ணிக்கையையும் பொருத்து அதற்கேற்ற முறையில் அளிக்கப்படவில்லை. மேலும், தனித்த பங்காளர்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தாங்களே தேர்ந்தெடுப்பதென்றும், கிராமச்சங்கத்தார் தங்கள் பிரதிநிதிகளைத் தாங்களே தேர்ந்தெடுப்பதென்றும், ஓர் பழக்கம் இருந்து வருகிறது. இம்முறை வெறுக்கத் தக்கது. இதனால் பங்காளர்களுக்கும், கிராமச் சங்கத்தாருக்கும் உண்மையான கூட்டுறவு ஏற்பட வழியே இல்லை. இது வரையில் மதம் காரணமாகவும், ஜாதி காரணமாகவும் வகுப்புவாதம் நிறைந்து நாட்டை பாழ்படுத்திவருகிறது. இந்நிலையில் கூட்டுறவு இயக்கத்தில் பணம் படைத்த பங்காளரும், கடன் பெறும் சங்கத்தாரும் இருவகுப்பாராகப் பிரிக்கப்பட்டு இருபுதிய ஜாதியார் உற்பத்தியாகியுள்ளது வருந்தத் தக்கது. பழக்க வழக்கம் காரணமாக ஏற்பட்டுள்ளதும், தொன்று தொட்டு உள்ளதுமான ஜாதிமுறையைவிட இதுகாலை கூட்டுறவு இயக்கத்தில் தோன்றியுள்ள புதியஜாதி மிக ஆபத்தானது எனலாம். அரசியல் துறையில் ஜாதிப்பிரிவு காரணமாக தனித்தொகுதி பிரசினை எழுந்துள்ளது என்றால், கூட்டுறவு இயக்கத்தில் தனித்தொகுதி தேர்தல்முறை புகுத்தப்பட்டமையால் ஜாதிப்பிரசினை என்பது ஏற்பட்டுள்ளது. இதுவே, பாங்கின் தனித்த பங்காளர் ஜாதி, கடன் வாங்கும் கிராமச் சங்கத்தார் ஜாதி என்பனவாம். பாங்கின் நலத்தைக் கருதுவோர் இவ்விரு ஜாதியையும் முளையிலேயே கிள்ளி எறியவேண்டும். அதற்கு ஏற்றவழி கூட்டுத் தேர்தல்முறையைப் புகுத்துவதேயாகும். அதாவது பாங்கின் நிர்வாக சபைக்கு தனித்த பங்காளர்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல், கிராமச் சங்கத்தார் தங்கள் பிரதிநிதிகளைத் தாங்களே தேர்ந்தெடுத்தல் என்பதற்குப் பதிலாக, இரு சாராரது பிரதிநிதிகளும் ஏககாலத்தில்



மகாஜனசபையாரால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற முறையை புகுத்த சங்க விதியில் திருத்தஞ் செய்வதேயாகும். இது விஷயத்தில் கவனத்தைச் செலுத்துமாறு பாங்கின் நலத்தையே முதன்மையானதாகக் கருதும். தனித்த பங்காளர்களையும் கிராமச் சங்கத்தாரையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

## அமரோதி மகாநாடு

அமரோதியில் நடைபெற்ற அகில இந்திய கூட்டுறவாளர் மகாநாடு மிகவும் விசேஷமானது. இந்தியாவின் பல்வேறு மாகாணங்களிலிருந்தும், சுதேச சமஸ்தானங்களிலிருந்தும், ஏராளமான பிரதிநிதிகள் மகாநாட்டில் கலந்து கொண்டதால், ஒருவரை ஒருவர் சந்திக்கவும், கூட்டுறவு இயக்கம் சம்பந்தமாக சில முக்யமான பிரசினைகளைப் பற்றி விவாதிக்கவும் சந்தர்ப்ப மேற்பட்டது. மேலும், இம்மகாநாட்டில் கலந்துகொண்டுள்ள பிரதிநிதிகள் அனுபவசாலிகளாகையால் அவர்களது அபிப்ராயத்தை அனுசரித்து நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள் கூட்டுறவாளருக்கு சிறந்த பொக்கிஷமாகும்.

கடந்தமாத இதழில் மகாநாட்டிற்குத் தலைமை வகித்த சர். லலுபாய் சமல்தாஸ் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு வெளிவந்துள்ளது. அவரது தலைமையுரை பொறுக்கு மணிகள் நிறைந்துள்ளது. நிற்க, மகாநாட்டை திறந்து வைத்த மத்திய மாகாண கூட்டுறவு மந்திரி கனம் பி. ஜி. காபர்டே அவர்களும், சென்னை மாகாண கூட்டுறவு பாங்குத்தலைவர் திரு. வி. ராமதாஸ் பந்துலு அவர்களும் நிகழ்த்தியுள்ள சொற்பொழிவைப் பிரித்தோரிடத்தில் காண்க. மத்திய மாகாண மந்திரி அவர்கள் கூறியவையாவும் அவர் அனுபவத்தில் கண்ட உண்மைகளாகும். கூட்டுறவு இயக்கத்தில் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுள்ளதற்குக் காரணம் குறுகியகால தவணையில் பணம் பெற்று நீண்டகால தவணையில் கடன் கொடுத்ததென்றும், தனித்த நபர்கள் பலர் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடாமையால் ஏராளமாகப் பணம் முடங்கிப் போனதென்றும், கௌரவ ஊழியர்களைக் கொண்டு வேலை நடத்தியதில் சம்பளம் பெற்று வேலை செய்வோர் எந்த அளவு வேலை செய்யக் கூடுமோ அந்த அளவு இவர்களால் முடியாமல் போனமை என்றும், விளைபொருளின் விலைக் குறைவால் விவசாயிகள் தங்கள் வாக்குறுதியை நிறைவேற்ற சக்தியற்றவர்களாயினர் என்றும் கூறியுள்ளார். "இத்தியாதி காரணங்களால் கிருஷிகளைக் காப்பாற்றத் தோன்றிய கூட்டுறவு இயக்கம் அவர்களுக்கு எமனாக வந்து விட்டது. ஏனெனில், மத்திய பாங்குகள் கிராமச் சங்கங்களை தவணைப்படி வாங்கிய கடனைச் செலுத்துமாறு நெருக்குகின்றன. கிராமச் சங்கங்கள் கடன் வாங்கியோர் மீது தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகின்றன. இதனால் கடன் வாங்கிய கிருஷிகள் திண்டாடித் தவிக்க நேரிடுகிறது," என மத்திய மாகாண மந்திரி அபிப்ராயப்படுகிறார். இவ்வாறு இருந்த போதிலும் கூட்டுறவாளர்கள் மனச்சோர்வடையக் கூடாதென்றும், நற்காலம் பிறக்குமென்ற நம்பிக்கையை கைவிடக்கூடாதென்றும், ஜனங்களின் பழக்க வழக்கத்தில் பெரும் மாறுதல் ஏற்பட வேண்டுமென்றும், அவர்கள் சிக்கன வாழ்க்கையின் அவசியத்தையும், வாக்குறுதியைக் நிறைவேற்றுவதில் தங்கள் கடமையையும் உணர வேண்டுமென்றும் கூறுகிறார். "இது வரையில் நாம் ஓர் வகையான ஜனநாயக ஆட்சி முறையைக் கூட்டுறவு இயக்கத்தில் கையாண்டு பார்த்தோம். சிறிதுகாலம் சர்வாதிகார ஆட்சி முறையை அமுலுக்குக் கொண்டுவந்து அதனால் ஏதாவது நன்மை உண்டா என்பதையும் பார்ப்போம்." என கனம் மந்திரி கூறியுள்ளது உத்தியோகப்பற்றற்ற கூட்டுறவாளருக்கு விளக்கெண்ணை குடிப்பதுபோல் குமட்டக்கூடுமென்றாலும், கூட்டுறவு இயக்கத்தின் முன்னேற்றத்தையே பெரிதாகக் கருதக்கூடிய எவரும் திரு. காபர்டே அவர்கள் கூறியுள்ளதில் சில உண்மையுள்ளதென்பதை ஒப்புக்கொள்ளாதிருக்க முடியாது.

## எது மேல்?

கிராமச்சங்கங்கள்தான் கூட்டுறவு இயக்கத்திற்கு அஸ்திவாரமாகும். கூட்டுறவு இயக்கத்தின் சாசுவதநிலை அஸ்திவாரத்தின் வலுவைப் பொறுத்திருக்கிறது. கிராமச்சங்கங்களை மூவகையாகப் பிரிக்கலாம். அதாவது, நல்ல சங்கங்கள், தூங்குமூஞ்சி சங்கங்கள், உதவாக்

கரை சங்கங்கள் என்பனவாம். நல்ல சங்கங்கள் மென்மேலும் விருத்தியாகும் பொருட்டு புதிய துறைகளில் கவனத்தைச் செலுத்தி வேலை செய்து அங்கத்தினர்களுக்கு நன்மை புரியலாம் தூங்குமூஞ்சி சங்கங்களைத்தான் அடிக்கடி உறக்கத்திலிருந்து தட்டி எழுப்ப வேண்டும்; மேம்பார்வை புரிதல்வேண்டும்; உதவாக்கரை சங்கங்களை கூடுமானால் திருத்தவோ அன்றேல் ஒழிக்கவோ வேண்டும். இவ்வேலைகளை எல்லாம் மேம்பார்வை புரிதல் என்பதாகும். மேம்பார்வைபுரிதல் குறித்து பத்திரிகைகளில் அடிக்கடி பெருத்த விவாதம் நடந்து வருகிறது. நடைபெற்றுவரும் விவாதங்கள் பலவற்றிலும் ராமதாஸ்—வேதாசலம் விவாதமே மிகப்பெரியதாகும். "மேம்பார்வை வேலைகளை மத்திய பாங்கிற்குப் பதிலாக செய்துவரும் ஜில்லா பெடரேஷன்கள் பயனற்றதும், வீண்பொருள் விரயத்திற்குறியதும், சிக்கலானதுமான ஸ்தாபனங்களென்பதே எனது திட்டவட்டமான அபிப்ராயமாகும்," என்று திரு. ராமதாஸ் கூறுகிறார்.

"யூனியன்களைப் பரிபாலனம் செய்யும் பொறுப்பு ஜில்லா பெடரேஷன் வசமிருந்தாலும் சரி, அல்லது ஜில்லா பாங்கு வசம் இருந்தாலும் சரி, அல்லது இரு ஸ்தாபனங்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டியின் வசம் இருந்தாலும் சரி, அன்றேல் எவ்வாறு இருப்பினும் எனக்கு ஆட்சேபனை இல்லை. யூனியன்கள் ஒவ்வொன்றும் எவ்வளவு பரப்பை எல்லையாகக் கொண்டிருப்பினும் ரூ. 50,000க் குறையாமலும், ரூ. 1,00,000 மேற்படாமலும் லேவாதேவி செய்துள்ளதாக இருக்கவேண்டும்," என்கிறார் திரு. வேதாசல அய்யர்.

"கிராமச்சங்கங்களையும், யூனியன்களையும் மேம்பார்வை புரியும் வேலை பாங்குகளுக்கு ஒப்படைக்கப் படுமானால் அது செம்மையாக நடைபெறாது. யூனியன்களின்கீழ் சங்கங்கள் இருக்கும் காலத்தில் என்னென்ன குறைகள் உண்டோ அவையாவும் பாங்கின்கீழ் சங்கங்களும் யூனியன்களும் விடப்படுமானால் அக்காலத்தில் பாங்கியில் நுழையும். அதனால் பாங்கின் வேலை கெடுவதுடன் அதற்கு சாவுமணி அடித்ததாக முடியும்; தற்சமயம் தாலுக்கா ஒன்றுக்கு இரண்டு மூன்று யூனியன்கள் விகிதம் இருந்து வருகின்றன. தற்போதைய பொருளாதார நிலையை உத்தேசித்து இவற்றை எல்லாம் ஒன்றாக இணைத்து தாலுக்காவுக்கு ஒரு யூனியனாகச் செய்தல் நலம்" என. திரு. சூரிய நாராயண செப்புகிறார். இவர்கள் கூற்றில் எதனை மேலென்பது? "கூட்டுறவுச் சங்கங்களை மேம்பார்வை புரிதல், கணக்குகள் தணிக்கை செய்தல் என்ற இருவேலைகளும் முக்யமானது. இது குறித்து விதண்டா விவாதம் புரிய எனக்கு இஷ்டமில்லை. மேல் நாட்டு முறையை அத்தாட்சியாகவோ அல்லது ஆதாரமாகவோ எடுத்துக் காட்டி எனது அபிப்ராயத்திற்கு ஆதரவுதேட நான் விரும்பவில்லை நமக்குத் தேவையாக உள்ளதெல்லாம் இவ்வேலையை இடத்திற்குத் தகுந்தார்போல் ஒழுங்கான முறையில் செம்மையாக நடைபெற ஒரு திட்டம் வகுப்பதே உசிதம்" என்ற சர். சமல்தாஸ் அபிப்ராயத்தை ஒட்டி நடப்பதே மேலென்போம்.

## வரவேற்கிறோம்

திருவாங்கூர் சமஸ்தானத்தில் திவானாக இருந்து சகலரது அன்பையும் கொள்ளைகொண்ட திரு. டி. ஆஸ்டின் சென்னை மாகாண கூட்டுறவு இலாக்கா ரிஜிஸ்திராராக நியமிக்கப்பட்டிருப்பது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். கட்சிப் பிரதி கட்சிகளாலும், வகுப்பு வாதத்தாலும் இந்திய அரசியல் வானம் இருண்டுள்ளதுபோல் கூட்டுறவு இயக்கமும் இருளால் சூழப்பட்டிருக்கிறது. திரு. ஆஸ்டின் அவர்கள் ரிஜிஸ்திரார் பதவியை ஏற்பதின் மூலம் கூட்டுறவு இயக்கத்தைச் சூழ்ந்துள்ள இருள் மறைந்து பிரகாசமேற்படுமென நம்புகிறோம். திரு. ஆஸ்டின் அவர்களது வரவால் பொதுவாக சென்னை மாகாணத்திற்கும், குறிப்பாக தமிழ் நாட்டிற்கும், சிறப்பாக திருச்சி மத்திய கூட்டுறவு பாங்கிற்கும் ஓர் நற்காலமென்றே சொல்லுவோம். திரு. ஆஸ்டின் நினைத்த காரியத்தை குறித்த காலத்தில் செய்யக்கூடிய தீரர். எவரது தயவிற்கும், தாட்சண்யத்திற்கும் கட்டுப்படாத நல்லார் பாரபட்சமின்றி நடக்கக்கூடியபெரியார். எதிரிகளும் மெச்சத்தக்க சமர்த்தர். அச்சம் என்பதை கனவிலும் அறியாத வீரர். இத்தகைய பெரியார் திரு. ஆஸ்டின் அவர்களை மனமகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.



# ஐக்கிய அயர்லாந்து

[மான்செஸ்டர் கோவாபரேடிவ் யூனியனால் பிரசுரிக்கப்பட்ட புஸ்தகத்தைத் தழுவி திரு. பி. என். சங்கர நாராயண அய்யர் பி.ஏ., பி.எல். எழுதியுள்ள கட்டுரை நமது கூட்டுறவாளருக்கு சிறந்ததோர் அறிவுச் சுடராகும்.]

அயர்லாந்து தேசத்தின் நிலைமை பலவிதத்திலும் நம்தேச நிலையை ஒத்திருந்தது. ஆனால் அத்தேசத்தினர் ஐக்கிய முறையைக் கைப்பற்றி வெகு சீக்கிரத்தில் பல நன்மைகளை அடைந்துவிட்டனர். ஆகவே, அவ்வாறு மேன்மை அடைந்த முறையை விசாரிப்பது நமக்கு நலம் தரும்.

அயர்லாந்தில் கூட்டுறவு இயக்கம் 1889-ம் ஆண்டில் ஆரம்பித்தது என்று சொல்லலாம். அயர்லாந்து கூட்டுறவு இயக்கத்தலைவர் சர். ஹோரஸ் பிளங்கட் என்ற பெரியார் அந்த வருஷத்தில்தான் அமெரிக்காவிலிருந்து திரும்ப தன் தேசத்திற்கு வந்து தன் நாடாகிய அயர்லாந்தின் முன்னேற்றத்திற்கு உழைக்க மனஉறுதி கொண்டார். அயர்லாந்து கூட்டுறவு இயக்கத்தை அறியவேண்டுமானால் அச்சமயம் அந்த தேசத்தின் நிலைமையை அறியவேண்டியது அவசியம்.

முதலில் அயர்லாந்து ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்தது. அவர்களது ஆட்சியால் ஜனங்களுக்கு எவ்வளவோ கஷ்டங்கள் இருந்தன. ஆங்கிலேயர்கள் அயர்லாந்தை அநேக வருஷங்களுக்கு முன்னேயே கைப்பற்றிக்கொண்டனர். அப்பொழுது அந்த ஜனங்களின் நிலத்தை எல்லாம் தங்கள் வசம் எடுத்துக்கொண்டு விட்டார்கள். இந்த நிலக்காரர் எல்லாரும் இங்கிலாந்தில் இருப்பது வழக்கம். பயிர் விளைந்தாலும்சரி, விளையாவிட்டாலும்சரி, வருஷம்தோறும் விவசாயிகளிடமிருந்து தங்களுக்குரிய பணத்தைப் பறித்துக்கொண்டு போய்விடுவார்கள். அயர்லாந்தில் விவசாயம்தான் முக்யமான தொழில். ஆகையால் ஜனங்கள் மிகவும் வறுமை அடைந்திருந்தார்கள். நிலமோ அவர்களுக்கு சொந்தமில்லை. விவசாயத்திலும் லாபமில்லை. ஜனங்கள் ஒருவிதமான உற்சாகமும் இல்லாதவர்களாக இருந்தார்கள்.

இந்நிலையில் 1846—48-ம் வருஷத்தில் அயர்லாந்தில் முக்கியமான பயிராகிய உருளைக்கிழங்குக்குப் பஞ்சம் ஏற்பட்டது. அதாவது, உருளைக்கிழங்கு பயிர் கெடலாயிற்று. விவசாயிகள் நிலக்காரர்களுக்குக் குத்தகைப்பணம் கொடுக்கமுடியவில்லை. இந்நெருக்கடியான நிலைமையை சர்க்கார் கவனிக்கவில்லை. ஓர் விசாரணைக்கமிஷன் நியமித்தனர். ஆனால் அக்கமிஷனது விசாரணையால் ஏற்பட்ட முடிவை ஏற்கவில்லை. தேசத்தில் கஷ்டம் மிகவும் அதிகரித்தது. அதுகாலை ஆட்சி நடத்திய ஆங்கில சர்க்கார் இதற்கு எத்தகைய பரிகாரமும் செய்தார்களில்லை. அதற்குப் பதிலாக இறக்குமதி செய்தார்கள். இதுவும் விவசாயிகளுக்குத் தீமையாக விளைந்தது. ஏனெனில் கிருஷிகள் கோதுமையை உண்பதில்லை. நிலத்தில் விளையும் கோதுமை முழுவதையும் தாங்கள் நிலக்காரர்களுக்குக் கொடுக்கவேண்டிய பணத்துக்காகக் கொடுத்து வந்தார்கள். அயல் நாட்டு கோதுமை வரவே கிருஷிகள் கொடுக்கவேண்டிய பணம் பாக்கி விழுந்தது. அதனால் கிருஷிகள் பலர் நிலத்தைவிட்டு விலக்கப்பட்டனர். நீக்கப்பட்ட கிருஷிகள் கப்பல் கப்பலாக அமெரிக்கா தேசத்திற்குச் சென்றனர். நாட்டில் கிருஷிகளின் எண்ணிக்கை குறைந்தது. 1849—50-ம் ஆண்டில் மேலே கண்டபடி 3 லக்ஷத்தி 78 ஆயிரம் குடும்பங்கள் நிலத்தை விட்டு விலக்கப்பட்டன. தேசத்தில் ஒரு பெரிய கிளர்ச்சி உண்டாயிற்று. இதுவே விவசாயிகள் இயக்கமாகும். இந்த இயக்கத்தின் நோக்கம் அயர்லாந்திலுள்ள நிலம் அயரிஷ் கிருஷிகளுக்குச் சொந்தமாக்கப்படவேண்டுமென்பதாகும்.

இறக, குடியானவர்கள் எண்ணிக்கை குறையத்தலைப்படவே விவசாயத்திற்குத் தகுந்த மிருதியான நிலத்தை மேய்ச்சல் நிலமாக்க நேரிட்டது. விவசாயத்தொழிலுக்கு [illegible]

முக்கியக் குறைகள் ஏற்பட்டன. செழிப்பான நிலங்களெல்லாம் மிகுதியாய் மேய்ச்சலுக்கு அடைக்கப்பட்டன. அயர்லாந்து கிருஷிகள் மூட நம்பிக்கையுடையவர்கள். நல்ல நிலங்கள் உள்ள இடங்களில் அவை விளங்கா நிலங்களென்பதாக எண்ணிக்கொண்டு அங்கே போகமறுத்தனர்; செழிப்பற்ற நிலப்பிரதேசங்களில் கூட்டமாய்க்கூடினர். அங்கு வயல்களும் சிறிது சிறிதாயின. இவ்வாறு செழித்த நிலம் விவசாயமின்றிப்போனது மன்றி மேய்ச்சல் நிலமாக மிகவும் உபயோகப்படவில்லை. ஏனெனில் அயர்லாந்து ஜனங்கள் அங்கு மேயும் கால் நடைகளை நன்றாய் கொழுக்கச்செய்து பிறகு நல்ல விலைக்கு விற்பதில்லை. அரைகுறையாய் போஷித்து அற்ப விலைக்கு இங்கிலாந்துக்கு விற்பார்கள். அவர்கள் அவைகளை பிறகு கொழுக்கச்செய்து பெரும் விலைக்கு விற்று லாபமடைவார்கள்.

மேலும், அயர்லாந்து விவசாயிகள் அஞ்ஞானமுடையவர்கள். கல்வி கிடையாது. தன்னம்பிக்கையும், சுய முயற்சியும் அற்றவர்கள். புது வழிகளை எளிதில் கைப்பற்றார். அவர்களது விவசாயமுறை பழைய காலத்தது; அயல் நாட்டினர் புதிய முறைகளைக் கைக்கொண்டு முன்னேற்றமடையும்போது அயரிஷ் கிருஷிகள் பண்டை முறையைக் கண்மூடித் தனமாகப் பின்பற்றி வந்தனர். ஐக்கிய முறையையும், நவீன வழிகளையும் அறியாத ஆயர்லாந்து கிருஷிகள் பலவித அயல்நாட்டு வியாபாரிகளுக்கும் எளிதில் இரையாயினர். அயர்லாந்தில் பாலாடை, வெண்ணை இவை மிகுதியாய் உற்பத்தியாகும். பாலில் இருந்து ஆடை, வெண்ணை எடுப்பதற்காக இந்த அயல்நாட்டு வியாபாரிகள் ஒன்று சேர்ந்து க்ரிமெரி யந்திரசாலைகளை அயர்லாந்தில் பல இடங்களிலும் ஏற்படுத்தினர். முதலில் கிருஷிகளது பாலுக்கு மிகுதியான விலை கொடுத்து பால் அனைத்தையும் தன் வசப்படுத்தினர். கிருஷிகள் தனித்தனியே வெண்ணை எடுத்து விற்று அடையக்கூடிய விலையைவிட இவர்கள் பாலுக்கே அந்த வியாபாரிகள் அதிக விலை கொடுத்தனர். ஆகவே, கிருஷிகள் வெண்ணை செய்வதைவிட்டு பாலை இவர்களுக்கு விற்றனர். தவிரவும், கிருஷிகள் சேர்த்து விற்கும் வெண்ணைக்கு நல்ல விலைவருவதில்லை. ஏனெனில் [illegible]ரிடமிருந்து ஒருவன் வாங்கி ஒன்று சேர்த்து அயல் தேசத்திற்கு அனுப்புவர். அப்பொழுது நல்லது கெட்டது, புதியது பழையது எல்லாம் ஒன்று சேரும். ஆகவே, எல்லாம் கெடும். சரக்கின் குணம் கெடவே அற்பவிலைதான் கிடைக்கும். அதனால் அதற்குத் தக்கபடி அவர்கள் விவசாயிகளுக்கு விலை கொடுப்பார்கள். ஆனால் புதிய கிரிமெரிகளில் வெண்ணைக்குக் கொடுப்பதைக் காட்டிலும் பாலுக்கு அதிக விலை கொடுக்கவே அனைவரும் வெண்ணை செய்வதைவிட்டு பாலை அவர்களுக்கு விற்றனர். வெண்ணை வியாபாரம் செய்துவந்த பழைய வெண்ணை வியாபாரிகள் தொலையவே கிரிமெரிகளும் பாலுக்குக் கொடுக்கும் விலையைக் குறைத்தன. விவசாயிகளிடம் ஒத்துழைப்பும், சுயமுயற்சியும், பொருளின் குணத்தில் கவனமும் இல்லாமையால் பராதீனப்பட்டு நாசமடைந்தனர். தவிரவும் இந்நாட்டில் கந்துக் கடைக்காரர் போல் அயர்லாந்தில் "காபின் காரர்" என்ற சிலரும் விவசாயிகளை உருஞ்சினர். இவர்கள் அசல் 100-க்கு 100 விகிதம் வட்டி வசூலிப்பது வழக்கம். தற்போதும் கூட அயர்லாந்தில் ஐக்கிய முறை எவ்வளவோ முன்னேறியும் இவர்களது தொழில் குறையவில்லை. உதாரணமாய் வெக்ஸ் போர்ட் என்ற இடத்தில் ஓர் கிருஷி காபின்காரனிடம் 50 பவுன் கடன் கேட்டிருந்தார். எதிர் வட்டிக்காகக் காபின் காரர் 30 பவுன் பிடித்துக்கொண்டு 20 பவுனை கிருஷிகனிடம் கொடுத்தார். அதில் 4 பவுன் அவ்வூர் போய்வரும் செலவுக்குப் போய்விட்டது. மீதி 16 பவுனே குடியானவன் கைக்கு வந்தது. இந்தக் கடனை $4\frac{1}{4}$ பவுனாக 12 வாய்தாவில் 51 பவுனாக திரும்பக் கொடுத்தார். இவ்வாறு பணத்தைப் பணமாக திரும்பக் கொடுப்பதற்கு பதில் காபின் காரனை மாகூலை அனுபவிப்பதின் மூலமாக வசூலித்துக் கொள்ளச் சொல்வதும் வழக்கம். இவ்விதம் கிருஷிகளிடம் அதிகவிலை வாங்குவதுண்டு. பலவிதமாய் சிக்கலான கொடுக்கல் வாங்கல் கணக்கெல்லாம் காபின் காரன் கைவசமே இருக்கும். கிருஷிகள் அதைப் பார்ப்பதுமில்லை. பார்த்தால் அறிந்துகொள்வதற்குத் திறமையும் அவர்களிடம் கிடையாது.

நாட்டின் விவசாயிகளின் நிலைமை இவ்வாறு பலவிதமாய் சீர் குலைந்திருப்பதைக் கண்டு இதற்



கெல்லாம் டென்மார்க்கு விவசாயிகள் அனுஷ்டித்த ஐக்கிய முறை ஒன்றே உத்தம சிகிச்சை என்று சர் ஹோரஸ் பிளங்கட் தீர்மானித்தார். அம்முறையைப் பின்பற்றி வேலை செய்ய அவருடன் ஒத்துழைத்த முதன்மையானவர்கள் ஆர். ஏ. ஆண்டர்சன், மாண்டீகள் பிரபு, பாதிரியார் பின்லே என்ற இம்மூவருமாவர். இவ்வியக்கத்தை உண்டாக்குவதில் இந்த நால்வரும் பட்ட கஷ்டங்களையும், முயற்சிகளையும் படித்தால் ஏனைய நாடுகளில் இவ்வாறு இந்த இயக்கத்தை உண்டாக்க ஆசைகொள்வோருக்கு மனதைரியம் உண்டாகும். அவர்கள் ஆரம்பித்தபோது பலரும் அது உபயோகமற்ற வேலை என்றனர். அயர்லாந்து தேசத்துக் கிருஷிகளை ஒற்றுமைப்படுத்துவது மணலைக் கயிறாகத்திரித்த அன்று தான் முடியும் என்றனர் பலர். அரசாங்கமும், ஆட்சிமுறையும் அனுகூலமற்றிருக்க இந்த முயற்சியில் எவ்வாறு வெற்றி ஏற்படும் என்றனர் சிலர். வியாபாரிகளும், அரசியல் வாதிகளும் எதிர்த்தனர். சர். ஹோரஸ் பிளங்கெட் ஏற்படுத்திய கூட்டுறவு இயக்கம் நாட்டிலுள்ள ஒரு கட்சியையும், வகுப்பினரையும், மதத்தினரையும் சாராது பொதுமுறையாய் இருந்தது. எனினும், பல கட்சியினரும் வகுப்பினரும் அதனை எதிர்த்தனர்; இகழ்ந்தனர். அதை நாட்டைக் கெடுக்க வந்த இயக்கம் என்று பலவாறு பகிரங்கமாய் உரைத்தனர். ஜனங்களுக்கோ புது முறைகளில் எப்பொழுதும் சந்தேகமும், பயமும், அவநம்பிக்கையும், சுயமாகவே அதிகம். ஆயினும் இவர்கள் பயப்படவில்லை. பற்பல இடங்களில் சுமார் 50 கூட்டங்கள் கூடி பேசியபின் சிறிது பயன்பட ஆரம்பித்தது. ஆனால், ஜெர்மனி, இத்தாலி, முதலிய நாடுகளில் உள்ளதுபோல் இங்கு ஐக்கிய நாணயசங்கங்கள் ஏற்படுத்த முடியவில்லை. ஏனெனில் பற்பல ஜாயிண்டு பாங்குகள் முன்னதாகவே எங்கும் ஏற்பட்டிருந்தன. தவிரவும் அயர்லாந்து தேச விவசாயிகள் தங்களது நிலைமையும், கஷ்டத்தையும், பிறருக்கு உரைக்க மனமற்றவர். ஆகவே, நாணயச்சங்கத்திற்குமுன் வேறு விஷயங்களிலேயே முதலில் ஐக்கிய முறை ஜெயம்பெறவேண்டும். இவை எல்லாம் யோஜித்து பலவாறு அஸ்திவாரம் போட்ட பிறகு 1803-ம் வருஷத்தில் சர். ஹோரஸ் பிளங்கெட் பலவித ஐக்கிய சங்கங்களை அயர்லாந்து பூராவும் பரப்புமாறு ஐரிஷ் விவசாய அபிவிருத்தி சங்கம் என்று ஓர் சங்கம் ஏற்படுத்தினார். ஐக்கிய முறையைப்பற்றி எங்கும் பிரசாரம் செய்வதும், உற்பத்தியான சங்கங்களுக்கு விவசாய முறை, ஐக்கிய முறை இவற்றை எடுத்துச் சொல்லி நடத்துவதும் அதன் கடமை. விவசாய முறைகளை நன்கு கற்பித்து விருத்தி செய்வதற்கு சர்க்கார் உதவியுடன் வேண்டிய முயற்சி செய்வதற்காக 1895-ம் ஆண்டில் சர் ஹோரஸ் பிளங்கெட் பலரையும் ஒன்று சேர்த்து ஒரு சபை கூட்டினார். இதற்கு ரிசஸ் கமிட்டி என்று பெயர். இதன் பலனாக விவசாய இலாக்கா, தொழில் முறை போதிக்கும் இலாக்கா, என்று இரு இலாக்காக்கள் அயர்லாந்தில் ஏற்பட்டன. இவ்விரண்டு இலாக்காக்களும் முன் சொன்ன ஐரிஷ் விவசாய அபிவிருத்தி சங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டியவை. அதற்குப் பதிலாக சீக்கிரத்தில் வியாபாரிகள் கைவசமாயின. கிருஷிகளுக்கு உபயோகமற்றுப் போயின. ஜனநெருக்கத்தைக் குறைப்பதாக திரு. பால் போர் மந்திரியாக இருந்த காலத்தில் "ஸ்டேட் போர்ட்" என்ற ஓர் இலாக்கா ஏற்படுத்தினார். கிருஷிகள் பெருத்த இடங்களில் உள்ள அவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதும், செழிப்பான புதிய இடங்களுக்குப்போய் அவர்களைக் குடியேறும்படி தூண்டுவதும், வயல்களை விஸ்தாரப்படுத்துவதும், கிருஷிகளைச் சரியான படி ஒருவருக்கொருவர் இடம் பெறச் செய்வதும், இந்த இலாக்கா செய்யும் வேலையாகும். இதனால் பெரும் நன்மை ஏற்பட்டது. அயர்லாந்து விவசாய அபிவிருத்திச் சங்கத்தின் முயற்சியால் செழிப்பும் வளமையும் ஏற்பட்டது.

## கூட்டுறவு இயக்கம்

சர். ஹோரஸ் பிளங்கெட் கைக்கொண்டு நடத்த முற்பட்ட கூட்டுறவு இயக்கம் 1889-ம் ஆண்டில் தொடங்கிற்று எனலாம். அதற்கு முன் அவர் பிரிட்டிஷ் கோவாபரெட்டிவ யூனியனில் சேர்ந்திருந்தார். அதன் வேலை முக்கியமாய் நகரங்களிலுள்ள தொழிலாளிகளின் ஐக்கிய பண்டகசாலைகளை ஏற்படுத்துவதே. சர். ஹோரஸை தலைவராகவும், ஆர். ஏ. ஆண்டர்சன் என்பவரை காரியதரிசியாகவும் வைத்து இந்த யூனியனுக்கு அயர்லாந்தில் ஓர் கிளைஸ்தாபனம்

ஏற்படுத்தப்பட்டது. கோவாபரெட்டிவ்யூனியன் கொடுத்த பணஉதவியைக் கொண்டு அயர்லாந்தில் ஐக்கிய இயக்கத்தைப் பரப்பும் வேலையை பிரதிபலன் எதிர்பாராத தேசாபிமானிகளின் ஒத்துழைப்பைக் கொண்டு சர். ஹோரஸ் செய்து வந்தார். ஆரம்பத்தில் பலவித கஷ்டங்கள் நேர்ந்தன. கிருஷிகன் தன் நம்பிக்கையற்றவர்கள். அவர்களது நிலைமை பரிதாபகரமானது. அவர்களிடையே ராஜீயக் கட்சியினரும், கூட்டுறவு இயக்க விரோதிகளும் நேர்முகமாகவும், மறைமுமாகவும் விஷமப் பிரசாரம் செய்தனர். சர். ஹோரஸ் பிளங்கெட்டை மனிதரை வதைக்க வந்த பிசாசென்றும், ஆண்டர்சனை அவருடைய அடிமை என்றும் எங்கும் தூற்றினர். ஓர் கிராமத்தில் அதிகப் பிரயத்தனஞ்செய்து வெண்ணைச்சாலையொன்று ஸ்தாபிக்கும் தருணத்தில் ஓர் தேசீய பிரசாரகர் அவரை நிந்தித்தார். அதனால் அவ்வேலை தடைப்பட்டது. கூட்டுறவு இயக்கத்தார் கூட்டும் கூட்டங்களுக்கு அதிகமாக யாரும் வருவதில்லை. 1890-ம் வருடம் அதிக சிரமப்பட்டு 50 கூட்டங்கள் கூட்டியபின் ஓர் கூட்டுறவு வெண்ணைச்சாலை ஸ்தாபிக்கப்பட்டது. இதில் சேர்ந்த ஒவ்வொரு அங்கத்தினரும் தன்னிடம் இருக்கும் ஒரு பசுவுக்கு ஒரு பவுன் விகிதம் பங்கு எடுத்துக் கொண்டார்கள். இப்பங்கு பணத்திற்கு 100-க்கு 5-க்கு மேல் வட்டி கொடுப்பதில்லை. பங்காளிகள் செய்யும் கொள்வினை கொடுப்பினைக்கு ஏற்றவாறு லாபம் பிரித்துக்கொடுக்கப்படும். பங்கு அதிகமாயினும் குறைவாயினும் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஒரு ஓட்டுத்தான் உண்டு. இக்கொள்கையின்படிதான் இன்றுவரை பாற்சாலைகள் நடத்திவரப்படுகின்றன. கூட்டுறவு இயக்கம் ஆரம்ப முதல் வேகமாய் பரவலாயிற்று. 1891-ம் வருஷம் 17 சங்கங்கள் இருந்தன. அதற்கு அடுத்த வருடம் சங்கங்களின் எண்ணிக்கை அதிகரிக்கவே அவைகளுக்குத் தேவையான சாமான்களை வாங்கவும், அவர்களுடைய வெண்ணை முதலியவற்றை விற்கவும் ஓர் தலைமையான பொதுச்சங்கம் ஏற்படுத்தப்பட்டது. 1894-ம் ஆண்டில் சங்கங்களின் எண்ணிக்கை 60 ஆயிற்று. இவைகளில் அநேகம் பாற்சாலைகளே. இவைகளுள் சில கூட்டுறவு முறையில் தங்களுக்கு வேண்டிய உரம், விதை முதலிய விவசாயப் பொருள்கள், உணவுப் பொருள்கள் முதலியன வாங்குவதற்கென ஏற்படுத்தப்பட்ட சங்கங்களாகும்.

இங்கிலாந்திலுள்ள தொழிலாளரின் கூட்டுறவு முறை அயர்லாந்தின் விவசாயிகளுக்கு உதவாது என்பது தெளிவாயிற்று. அயர்லாந்தில் தனி ஸ்டோர்கள் அவசியமில்லை என்றும், கிருஷிகளின் விவசாயத்திற்குத் தேவையான கூட்டுறவுச் சங்கங்கள் மட்டும் போதுமென்றும் சர். ஹோரஸ் பிளங்கெட் கருதினார். ஏனெனில் நகரங்களில் வேலை செய்யும் ஜனங்களது நோக்கமும், நாட்டிலுள்ள கிருஷிகள் நோக்கமும் மிக வித்தியாசமானவை. உதாரணமாக விவசாயிகளுக்குத் தாம் விளைவிக்கும் பொருளை அதிக விலைக்கு விற்பதில் அக்கரை. நகரவாசிகளுக்கு அதை குறைந்த விலைக்கு வாங்குவதில் அக்கரை. கூட்டுறவு முறையை பூர்ணமாகக் கைப்பற்றும்போது இருவர் நோக்கமும் ஒன்றுபடுமாயினும், ஆரம்பத்தில் இருவரது நோக்கமும் வழிகளும் வேறுபடும். இவ்வித் தகரார்கள் அயர்லாந்தில் வருஷா வருஷம் நடந்த கூட்டுறவு காங்கிரஸில் தோன்றின. இதன் பயனாக நகரப்பண்டசாலைகள் சேர்ந்த சீமை கூட்டுறவு யூனியனுடைய பண உதவியை நம்ப முடியாதென தெளிவாயிற்று. தவிரவும் நாட்டில் உற்பத்தியான பல விவசாயச் சங்கங்களை ஒருவர் அல்லது இருவர் மட்டும் நிர்வாகம் செய்ய முடியாதபடி வேலை விரிந்தது. அதை மேம்பார்வை நடத்த ஸ்திரமான ஒரு சிப்பந்தியும் மிகுந்த பணஉதவியும் தேவையாயிற்று. ஓர் சங்கத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்று 1894-ம் வருஷத்தில் பொதுஜனங்களுக்கு விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்டது. தேவையான உதவி கிடைத்தது. ஆகவே, அயர்லாந்தின் விவசாயத்தை முன்னுக்குக்கொண்டு வருவதையே நோக்கமாகக்கொண்ட அயர்லாந்து விவசாய அபிவிருத்திச் சங்கம் என்ற சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. ஐந்து வருடம் வரை இந்த சங்கம் ஐக்கிய முறையை பிரசாரம் செய்து சிறு சங்கங்களை அடிக்கடி கவனித்து முன்னுக்குக் கொண்டுவரவேண்டியதென்றும், பிறகு சிறிய சங்கங்களை சேர்த்து ஓர் பெரிய



சங்கம் ஏற்படுத்தப்படவேண்டுமென்றும், அதன் வசம் விவசாய அபிவிருத்திச் சங்கம் ஒப்படைக்கப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இங்ஙனமிருக்க தர்ம சிந்தனை கொண்ட கனவான்கள் சிலரின் உதவியால் விவசாய அபிவிருத்தி சங்கத்திற்கு 10,000 பவுன் நன்கொடையின் மூலம் சேர்ந்தது. ஐரிஷ் கூட்டுறவு யூனியன் அதன் ஏஜண்டான ஆண்டர்சனுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிப்பதற்கு ஏற்படும் செலவைக் கொடுத்து வந்தது.

1894—95-ம் வருஷத்தில் 315 கூட்டங்கள் நடந்தன. 34 புதிய சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. ஐரிஷ் ஹோம்ஸ்டேட் என்ற பத்திரிகை 9—3—1895-ல் ஆரம்பிக்கப்பட்டது. பாற்சாலைகள் தவிர கூட்டுறவு முறைப்படி பொருள்கள் வாங்க விவசாய சங்கங்களை ஸ்தாபிக்க முயற்சிகள் செய்யப்பட்டன. இங்கிலாந்தில் கூட்டுறவு இயக்கத்தில் பிரசித்தி பெற்றவர்களான உல்ப், ஏர்பர்க் என்பவர்களை அயர்லாந்துக்கு அழைத்தார்கள். அவர்கள் சொற்படி ரெய்பின்ஸின் சங்கங்கள் போன்ற முறையில் டோன ரயில் என்ற இடத்தில் ஓர் சங்கம் அமைக்கப்பட்டது. சாராயம், பலசரக்குக்கடை, காபின், கந்துக் கடை, இவற்றினின்றும் கிருஷிகளைக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் ஓர் பாங்கு ஏற்படுத்தப்பட்டது. மறு வருஷத்தில் டென்மார்க் தேசத்தில் பன்றி இறைச்சியை சுத்தம் செய்யும் வழியைக் கண்டுபிடிக்க சிலரை அத்தேசத்திற்கு அனுப்பினார்கள்.

1895-ம் வருஷத்தில் பிரிட்டிஷ் கூட்டுறவு சம்பந்தம் ஒழிந்தது. இந்த வருஷத்தில் பிரிட்டிஷ் யூனியன் அநேக பாற்சாலைகளை விலைக்கு வாங்கிற்று. இதன் நிர்வாக முறை இங்கிலாந்திலுள்ளவர்களுக்கு அனுகூலமாய் இருந்ததே யொழிய அயர்லாந்து ஐக்கிய முறைக்குப் பயனற்றதாக இருந்தது. ஆகையால் ஐக்கிய விவசாய அபிவிருத்தி சங்கத்திற்கும் யூனியனுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. பிறகு அந்த பாற்சாலைகளை ஐரிஷ் யூனியனுக்கு விற்கப்பட்டதின் பேரில் சமாதானம் ஏற்பட்டது.

நிற்க, கூட்டுறவுச் சங்கங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தன. நாடெங்கும் யாவரும் அவற்றினைக்கவனிக்கலானார்கள். சொந்த லாபத்தையே கருதிய வியாபாரிகளும் முதலாளிகளும் இந்தக்கூட்டுறவுச் சங்கங்களை எதிர்க்கலாயினர். கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் ஒன்று சேர்வது அவசியமாயிற்று 1897—98-ம் வருஷத்தில் இவைகள் அனைத்தையும் கூட்டி அயர்லாந்து பூராவுமுள்ள கூட்டுறவு முறை வியாபார உதவிக்காக மொத்தமாக சாமானை வாங்கிப்பிரித்துக் கொடுக்க மத்திய சங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டது. தனிலாபம் சம்பாதிக்கும் வியாபாரிகள் விவசாயிகளைப் படுத்தும் துன்பங்களினின்றும் மீட்பதற்கு இச்சங்கம் உதவி செய்தது.

இப்பொழுது இதற்கு வருஷமொன்றுக்கு 10 லக்ஷம் பவுன் வரை வியாபாரமாகிறது. இந்த மொத்த வியாபார சங்கங்களுக்கும் முன் முதல்போட உதவி இல்லாமையால் இடையூறு அதிகம் ஏற்பட்டது. கிளைச்சங்கங்கள் அனைத்தும் அதில் பங்கு எடுத்து முன் முதலுக்கு வேண்டிய பணஉதவி செய்யவேண்டும் என்ற ஏற்பாடு செய்வது அவசியம் என்பது இதனால் பின்னர் தெரியவந்தது. உதாரணமாக 1897-ம் ஆண்டில் கிளைச்சங்கங்களது வியாபாரம் நான்கு லெட்சம் பவுன்வரை இருந்தும் இவை மொத்த வியாபாரச் சங்கங்களுக்கு உதவி செய்யாமையால் அச்சங்கம் கிட்டத்தட்ட கதவடைக்க வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டது. சர். ஹோரஸ் பிளங்கெட் முதலிய பொதுஜன உபகாரிகள் சிலர் தம் கையிலிருந்து பண உதவி செய்து அதைக் காப்பாற்றினர். கிளைச்சங்கங்கள் தம் வியாபாரத்தில் 100-க்கு ஒன்று விகிதம் மொத்த வியாபாரச் சங்கத்திற்குக் கொடுத்திருந்தாலும் அது இக்கெதிக்கு வந்திராது.

அயர்லாந்து விவசாய அபிவிருத்திச் சங்கம் இவ்வாறு ஐக்கிய முறையை விருத்தி செய்தது மட்டுமன்றி விவசாய முறைகள் அந்தந்த சாஸ்திர ஆராய்ச்சி பயிற்சி முதலியதையும் நாடெங்கும் கற்பித்தது. இவைகளைக் கற்பியாவிடின் விவசாயிகள் கூட்டுறவு முறையால் பூர்ண லாபம் அடைய முடியாது. ஆனால் இவைகளை கற்பிப்பது அரசாங்கத்தார் செய்யவேண்டிய வேலை என்று தோன்றியது. ஆகவே, 1895-ம் வருஷம் ரிசெஸ் கமிட்டி என்ற ஓர் கமிட்டி கூடி இவ்விஷயத்தில் மேல் நடக்கவேண்டிய விஷயங்களை ஆலோசித்து ஓர் அறிக்கை பிரசுரம் செய்

தது. இவ்வறிக்கை சகலரும் படித்து ஆராய்ச்சி செய்யவேண்டியதோர் முக்கிய நூலாகும். விவசாய இலாக்கா, தொழில்முறையை கற்பிக்கும் இலாக்கா என்ற புது இலாக்காக்கள் ஏற்படுத்த வேண்டு மென்றும், இவ் விரு இலாக்காக்களும் அயர்லாந்தின் கிராம முன்னேற்றத்திற்காக விவசாய அபிவிருத்தி சங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டுமென்றும் இக்கமிட்டி சிபார்சு செய்தது. இவ்வாறு உதவி இலாக்காக்கள் ஏற்படுத்த மிக காலதாமதமாயிற்று. இதற்குள் அயர்லாந்து விவசாய அபிவிருத்திச் சங்கம் மிக சிரமமெடுத்து எல்லாக் கிளைச்சங்கங்களையும் ஒன்றாக இணைத்து ஓர் பெடரேஷனை நிறுவியது. மிகுந்த பணக்கஷ்டத்துடனே விவசாய முறை, தொழில் முறை முதலிய கல்வியைப் பரப்பி வந்தது. கடைசியாக 1900-ம் வருஷம் பிரத்தியேக இலாக்கா ஏற்படுத்தப்பட்டது. அதற்கு சர் ஹோரஸ் பிளங்கெட் முதல் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் இப்பதவியை எழுவருடகாலம் வகித்து வந்தார். இதுவரை விவசாய அபிவிருத்திச் சங்கம் செய்து வந்த விவசாயமுறை, தொழில் முறை முதலியவற்றினைப் பரப்பிவரும் வேலையை இப்புதிய இலாக்கா ஏற்றுக்கொண்டது. விவசாய கவுன்ஸில் போர்ட், விவசாய போர்ட் என்ற இருசங்கங்கள் இத்துடன் ஒத்துழைப்பதற்கு ஏற்படுத்தப்பட்டன. இவைகளில் கிருஷிகள் மிகுதியாய் அங்கத்தினர்களாய் சேர்ந்தனர். விவசாயக்கல்வி நாடெங்கும் பரவவே பலதுறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. கூட்டுறவுச் சங்கங்கள் அதிகரித்தன. அவைகளின் வியாபாரமும் அதிகமாயிற்று. ஆனால் சர்க்கார் இலாக்காவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களை விவசாயச் சங்கக் கமிட்டியில் அங்கத்தினர்களாக்குவது இடைஞ்சல்களை உண்டாக்கியது. அதனால் சங்கங்களுக்கிருந்த தன்நம்பிக்கையும், தன்முயற்சியும் குறைய மார்க்கமிருந்தது. விவசாயிகள் சர்க்கார் உதவிக்கும், கூட்டுறவுச் சங்கங்கள் உதவிக்கும் பேத மறியாது குழப்பமடையலாயினர். சிலர் இனி விவசாய அபிவிருத்திச் சங்கத்திற்கு உதவி புரிவதும் அத்துடன் ஒத்துழைப்பதும் அவசியமில்லை என்றனர். சிலர் சர்க்கார் இலாக்கா மீது கொண்டுள்ள அபிப்பிராயத்தை விவசாய அபிவிருத்திச் சங்கத்தின் மீதும் கொள்ளத் தலைப்பட்டனர். அதனால் விவசாய அபிவிருத்திச் சங்கத்திலிருந்து விலகலாயினர். இவ்வாறு விவசாய அபிவிருத்திச் சங்கத்திற்கு கெடுதல் உண்டாயிற்று

1907-ம் ஆண்டில் ஓர் மாறுபாடு ஏற்பட்டது. அப்பொழுது சில சில்லறை வியாபாரிகள் சர்க்கார் இலாக்காவும், விவசாய அபிவிருத்தி சங்கமும் ஒத்துழைப்பதால் தங்களுக்கு நஷ்டம் வருவதாக எண்ணம் கொண்டு சர்க்காரை வற்புறுத்தினார்கள். அதற்கிணங்கி அரசாங்கத்தார் சர். ஹோரஸ் பிளங்கெட்டை தம் ஸ்தானத்திலிருந்து விலகச்செய்து சர். டி. டபிலியூ. ரஸ்ஸல் என்பவரை காலியான ஸ்தானத்திற்கு நியமித்தனர். விவசாய இலாக்காவில் பல மாறுதல் ஏற்பட்டது. விவசாய அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் ராஜீயக் கட்சியில் சேர்ந்தார் என்ற காரணத்தை வைத்து அச்சங்கத்திற்கு சர்க்கார் அளித்து வந்த பொருளுதவி நிறுத்தப்பட்டது. அக்காரணம் பொய்யானதென பின்னர் தெரிய வந்தது. இதுகாரணமாக சர்க்கார் விவசாயத் தொழில் இலாக்காவுக்கும் விவசாய அபிவிருத்திச் சங்கத்திற்கும் இருந்து வந்த ஒற்றுமை குலைந்தது. அதன் பின் இருவருக்கும் ஓயாத தகராறே நடந்து வருகிறது. இவ்வாறு நெருக்கடி நேர்ந்தபோதும் தர்ம சிந்தனையுள்ள பெரியார்கள் பலர் பண உதவி செய்யலாயினர். விவசாய அபிவிருத்திச் சங்கம் ஒரு தடையுமின்றி தம் காரியங்களை வெகு விமரிசையாய் வேலை நடத்திவரலாயிற்று. ஆயினும் சங்கங்களின் வேலைகள் சரிவர முன்னேறுவதற்கு வெளியிலிருந்து அதிகப் பணம் உதவி அவசியமென்று தெளிவாயிற்று. 1909-ம் ஆண்டில் விவசாயத்தை விருத்தி செய்யவும் ரஸ்தாக்களை செப்பனிடவும் வேண்டிய உதவி செய்வதற்காக பார்லிமெண்டார் விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமித்தனர். இக்கமிஷனர்கள் க்ஷேம அபிவிருத்தி உண்டாக்கும் வழிகளுள் சுயமுயற்சியால் ஏற்படும் கூட்டுறவுச் சங்கங்களை ஆதரித்து கூட்டுறவு முறையை விருத்தி செய்தல் ஓர் ஐக்கிய வழி என குறிப்பிட்டார்கள். இங்கிலாந்தில் 1900ம் வருஷத்திலும், ஸ்காட்லாந்தில் 1905லும் அயர்லாந்து கூட்டுறவுச் சங்கங்களை அனுசரித்து ஸ்தாபிக்கப்பட்ட விவசாய அபிவிருத்திச் சங்கத்திற்கு பணஉதவி செய்வதற்கு திட்டங்கள் ஏற்



படுத்தப்பட்டன. ஆனால் அதுபோலவே அயர்லாந்து விவசாய அபிவிருத்திச் சங்கத்திற்கு பண உதவி செய்யவேண்டுமென்று விவசாயச் சங்கம் கேட்டதற்கு சர்க்கார் இலாக்காவிலிருந்து மிகுந்த ஆட்சேபனைகளும் தடையும் ஏற்பட்டன. ஆனால் கமிஷனர்கள் ஒரே மன உறுதியாய் அனுகூலமாய் நின்று 1913-ம் வருஷத்தில் பணஉதவி செய்ய திட்டம் ஏற்படுத்தினர். அது முதல் கல்விக்குமட்டும் வருஷம் 6000 பவுனுக்கு அதிகப்படாமல் விவசாய அபிவிருத்திச் சங்கத்திற்குக் கொடுக்கிறார்கள். தற்சமயம் விவசாய அபிவிருத்திச் சங்கத்தில் பலரும் சேர்ந்திருக்கின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட 24 அங்கத்தினர்களே சங்கத்தை நடத்துகின்றனர். 1919-ம் வருஷம் தலைமைச் சங்கத்துடன் சம்பந்தப்பட்ட சங்கங்கள் 1028. இவைகளில் 340 பெரிய பாற்சாலைகள், 99 சிறிய பாற்சாலைகள், 138 நாணயச்சங்கங்கள், 350 விவசாயச் சங்கங்கள். இவையாவற்றினும் உள்ள மொத்த அங்கத்தினர்கள் 1;35,369. வசூல் செய்யப்பட்ட பங்குத்தொகை 4,34,248 பவுன். கடனாக வாங்கப்பட்ட முதல் 8,82,770 பவுன். மொத்த லேவாதேவி பவுன் 1,11,585,83. இதில் பாற்சாலைகள் மட்டும் 7,047,079 பவுன் முதலாகக் கொண்டுள்ளது.

148730.

சர். ஹோரஸ் பிளங்கெட் சர்க்கார் இலாக்காவிலிருந்து விலக நேர்ந்தபோது அவரது நண்பர்கள் டப்ளின் நகரில் அவருக்கு பிளங்கெட் ஹவுஸ் என்ற இடத்தை அளித்தனர். அவரது விருப்பப்படி ஹெட்க் வார்ட்ஸ் என்ற இடம் கூட்டுறவு இயக்கத்திற்கு தலைமை ஸ்தானமாயிற்று. இங்கு விவசாய அபிவிருத்தி சங்கத்தின் தலைமைக்காரியாலயம் இருக்கிறது. அயர்லாந்து பூராவுமுள்ள கூட்டுறவுச சங்கங்களின் கணக்குகளை குறைந்த கட்டணத்திற்குத் தணிக்கை செய்யும் பரிசோதனை இலாக்காவின் காரியாலயம் இங்கு தான் உள்ளது; பிளங்கெட் ஹவுஸில் "ஐரிஷ் ஹோம் ஸ்டேட்" என்ற பத்திரிகையின் காரியாலயமும், ஐக்கிய இயக்க போதக புத்தகாலயமும் இருக்கின்றன. ஐரிஷ் ஹோம் ஸ்டேட் என்ற பத்திரிகை ஐக்கிய இயக்கத்தின் ஆரம்பத்தில் குடித்தன முறையை ஜனங்களுக்குப் போதிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. அதை சென்ற 12 வருடங்களாக ஜார்ஜ் ரஸ்ஸல் என்பவர் வெகு திறமையுடன் நடத்திவருகிறார்.

இப்பத்திரிகை வாராவாரம் பிரசுரமாகிறது. இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து, அமெரிக்கா ஆகிய இடங்களில் இப்பத்திரிகை போற்றப்படுகிறது. கூட்டுறவு நூல் புத்தகாலயம் ஒன்று சர். ஹோரஸ் பிளங்கெட்டால் நிறுவப்பட்டது. கூட்டுறவு முறையில் விவசாயத்தையும், தொழில்களையும் அபிவிருத்தி செய்வதில் ஊக்கமும் உழைப்பும் உடையவர் யாவருக்கும் வேண்டிய விஷயங்களையும் தகவல்களையும் கொடுப்பது இந்த வாசக சாலையின் முக்கிய கருத்து. உலகிலுள்ள ஒவ்வொரு நாடுகளிலும் கூட்டுறவு முறை எவ்வாறு கைக்கொள்ளப்படுகிறது என்று தகவல்கள் விசாரித்து யாவரும் தாம் அனுஷ்டிக்கவேண்டிய விஷயங்களை எளிதில் அறியும்படி புகுத்தி கோர்வை செய்து பிரசுரம் செய்கிறார்கள். மேம்பட்ட வியாபாரம் என்ற பத்திரிகையை மூன்று மாதத்திற்கு ஒரு முறை பிரசுரம் செய்கிறார்கள். அயல் நாடுகளிலிருந்து அயர்லாந்தின் ஐக்கிய முறையை ஆராய்ந்து அறிந்து கொள்பவருக்கு இப்புத்தகசாலை வேண்டிய சௌகரியங்கள் செய்கிறது. அவ்வாறு நேரில் வர முடியாதவர்கள் கடிதமூலம் தெரிந்துகொள்ள விரும்பினால் அவ்வப்போது தக்கபதில் அளிக்கப்படுகிறது.

அயர்லாந்தில் கூட்டுறவு இயக்கத்தில் வேறொரு முக்யமான பாகம் யாதெனில் மாதர் சங்கமாகும். இதில் விவசாயிகளின் மனைவிகளும், பெண்களும் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். சர். ஹோரஸ் பிளங்கெட்டின் அந்தரங்கமான எண்ணப்படி மேம்பட்ட விவசாயம், மேம்பட்ட வியாபாரம், மேம்பட்ட வாழ்க்கை என்ற மூன்று அம்சங்களில் கடைசி அம்சத்தை நிறைவேற்றுவதே இச்சங்கத்தின் நோக்கமாகும். குடிசைத் தொழிலை விருத்திசெய்வது, வறுமையால் வருந்தும் கிருஷிகளது குழந்தைகளுக்கு பால் அளிக்கும் ஸ்தலங்கள் ஏற்படுத்துவது, கோழி முட்டைகளை சேகரித்து விற்பனை செய்ய ஆட்களை நியமிப்பது, தோட்டப்பயிர் முறை விருத்தி சங்கங்களை ஏற்படுத்துவது,

(14-ம் பக்கம் பார்க்க.)

# கூட்டுறவு இயக்கத்தில் போராட்டம்

## பாங்குகள் தள்ளாட்டம்; கடன்பட்டோர் திண்டாட்டம்

## முன்யோசனையின்மையால் விளைந்த தீமை

### கூட்டுறவு இயக்கம் இருப்பதா? இறப்பதா?

### ஜனநாயக ஆட்சியைவிட சர்வாதிகாரியே மேல்

*மத்திய மாகாண மந்திரி நல்லுபதேசம்*

அகில இந்திய கூட்டுறவு பாங்கு மகாநாட்டை திறந்து வைத்த மத்திய மாகாண மந்திரி கனம் பி. ஜி. காபர்டே நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்சம் பின் வருமாறு:—

கூட்டுறவு இயக்கம் அநேகமாக இந்தியா பூராவும் இன்னலுக்காளாகி இருக்கிறது. சமீபத்தில் நடைபெற்ற பொருளாதார மகாநாட்டில் இந்திய சர்க்காரால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி பார்த்தால் பெரும்பாலான மாகாணங்களில் கூட்டுறவு இயக்கம் பெரும் சங்கடத்திற்காளாகி இருக்கிறதென்பதும், அதிலும் சில இடங்களில் அதன் நிலை கவலைக்கிடமானதாக இருக்கிறதென்பதும் தெரியவரும். கூட்டுறவு இயக்கம் உள்ள நிலைமையை ஓர் உதாரணத்துடன் விளக்க விரும்புகிறேன். பெரியதோர் நீர் நிறைந்த ஏரியையும், தாகத்தால் பீடிக்கப்பட்ட ஜனங்கள் நிறைந்த உலகையும், வரண்ட நிலத்தையும் எடுத்துக் கொள்வோம். நீர் தேக்கத்திலுள்ள ஜலத்தை தேவையான ஜனங்களுக்கு உபயோகப்படும் முறையில், பண்படக்கூடிய நிலங்களில் பாயும் வகையில் ஆறுகளும், வாய்க்கால்களும், கால்வாய்களும் வெட்டப்படுகின்றன. அதுபோலவே கூட்டுறவு இயக்கத்திலும் பணம்படைத்தோர் நீர் தேக்கம் போலும், பணமுடையுள்ள கிருஷிகளும், தொழிலாளரும் தாகமுள்ளவர்களாகவும், வரண்ட நிலம் போலும் விளங்குகின்றனர். நீர் தேக்கத்திலுள்ள தண்ணீர் கால்வாய் வழி செல்லும்போது ஏற்படும் தங்கு தடைகாரணமாக எவ்வாறு சரியான பாசன மேற்படாது தீமை விளைகிறதோ அதுபோலவே கூட்டுறவு இயக்கத்திலும் சில குற்றம் குறைகள் நுழைந்துள்ளமையால் கெடுதல் ஏற்பட்டுள்ளது எனலாம். கூட்டுறவு இயக்கதின் ஓர் பாகம் பாதிக்கப் படுமாகில் அது அவ்வியக்கம் பூராவையுமே தாக்கும். எனவே, அவ்வியக்கம் விருத்தி அடையவேண்டுமானால் அது சம்பந்தப்பட்ட ஒவ்வொரு அம்சத்திலும் கண்ணோட்டமிருக்கவேண்டும். நமது பாங்குகளில் டிபாசிட்டாகப் பணம் போடும் செல்வந்தரின் நலமும், பாங்கிலிருந்து பணம் வாங்கும் கிருஷிகளின் நலமும் ஏக காலத்தில் பாதுகாக்கப் படவேண்டும். அம் முறையில் பாங்கு நிர்வாகம் தூய்மையாக நடத்தப் படவேண்டும்.

### ஓர் தவறு

குறைந்தகால தவணையில் டிபாசிட்டு பெற்று அதனை நீண்டகால தவணைக் கடனுக்கு உபயோகிப்பதென்ற பழக்கம் கூட்டுறவு பாங்குகளில் நுழைந்து விட்டது. இது ஓர் பெரும் தவறென்பதை இது சமயம் எவரும் மறுப்பதற்கில்லை. ஓர் நபரிடம் டிபாசிட்டு வாங்கும் போது ஓர் குறிப்பிட்ட காலம் வரையறுக்கப்படுகிறது. அங்ஙனமிருக்க அப்பணத்தை நீண்ட கால தவணைக்குக் கடன் கொடுக்க உபயோகிப்பதென்றால் அதன் நோக்கமென்ன? டிபாசிட்டாகப் பணம் போட்டோர் குறித்த காலத்தில் பணத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள விரும்பமாட்டார்கள், டிபாசிட்டு காலத்தை நீடித்துக் கொள்வார்கள் என்ற எண்ணமும், கடன் வாங்கியவர் குறித்த காலத்தில் திரும்ப கொடுத்து



திருப்பிக் கொடுத்துவிடுவார் என்ற நம்பிக்கையுமே இவ்வாறு நடந்துகொள்ள இடங்கொடுத்தது. எத்தகைய எண்ணத்துடனோ, எவ்வாறான நம்பிக்கையுடனோ. இவ்வாறான முறைகையாளப்படினும் அதனால் தீமையே விளைந்துள்ளதென்பதும் உண்மையே, போதிய அனுபவமின்மையால் தவறான வழிகள் இவ்வியக்கத்தில் கையாளப்பட்டமையால் குறிப்பிட்ட ஒரு சில நபர்களிடம் ஏராளமான பணம் முடங்கும்படி நேர்ந்து விட்டது. இதனால் மிகவும் தேவையானவார்களான கிருஷிகளுக்கு பணம் கிடைக்காமல் போயிற்று. மேலும், நீண்டகால தவணையில் பணத்தை வாங்கியோர் அதனை உற்பத்தித் துறையில் பயன்படுத்தாது வீண் செலவு செய்துவிட்டு பின்னர் ஈடு செய்வதற்கு வகை தெரியாது விழிக்கின்றனர். யுத்தத்தில் முறியடிக்கப்பட்ட தளகர்த்தன் புதிய வழிகளைக் கண்டுபிடிப்பதில் கவனத்தைச் செலுத்துவது போல் நாமும் நமக்குள்ளதை விட்டொழித்து புதிய துறைகளில் கவனத்தைச் செலுத்துகிறோம்.

### எதிர்பாராத சம்பவம்

மகா யுத்த காலத்திலும், அதற்கும் பின்னரும் கூட், விளைபொருள்களின் விலை வாசிகள் ஏற்றமாகவும், திருப்திகரமாகவும் இருந்தமையால் அதைப்போன்ற சுபேட்சகரமான நிலை என்றும் இருக்கும் என்று நம்பி இருந்தோமேயன்றி இன்று நேர்ந்துள்ளது போன்ற நெருக்கடியான நிலை ஏற்படக்கூடுமென்பதை எவரும் சிந்தித்தார்களில்லை. எனவே, அக்காலத்தில் பாங்குகளெல்லாம் பணத்தின் அருமை தெரியாமல் பணத்தை தாராளமாக தங்குதடையின்றி கடன் கொடுத்து வந்தன. தாங்கள் கொடுக்கும் பணத்தை சல்லிசாக வசூலிக்கலாமென எண்ணி இருந்தன. அதுபோலவே கடன் வாங்குவோரும் வாங்கிய கடனை என்னதான் கஷ்டம் வந்தாலும் சிரமமின்றி கட்டிவிடலாமென நினைத்து கையில் ஒரு காசும் மிச்சம் பிடிக்காமல் கண்மூடித்தனமாக செலவு செய்து வரலாயினர். துரதிருஷ்ட வசமாக பணத்தைக் கொடுத்தோர் போட்ட புள்ளியின்படியும், கடன் வாங்கியோர் கட்டிய மனக்கோட்டையின்படியும் ஒன்றும் செய்து கொள்வதற்கில்லாமல் போயிற்று. காலபலம் போதாமையால் விளைபொருள் மட்டுப்பட்டது; வியாபார மந்தம் காரணமாக விலைவாசிகள் குறையலாயிற்று; பொருளாதார நெருக்கடி காரணமாக என்றும் எவரும் எண்ணுவதற்கில்லாத கஷ்டமான நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் பயனாக, கிருஷிகளின் செல்வ நிலையை விருத்திசெய்து அவர்களது வாழ்க்கையை மேம்படச் செய்வதென்ற நோக்கத்துடன் தோற்றுவிக்கப்பட்ட கூட்டுறவு இயக்கம் அதனை ஈடேற்றுவதற்கில்லாது போயிற்று. போதாக்குறைக்கு இவ்வியக்கம் விவசாயிகள் நலத்திற்கு உலைவைப்பதற்கெனநாட்டில் பரப்பப்பட்டதாகக் குறை சொல்லும்படியான நிலையை அடைந்துவிட்டது. மத்திய பாங்குகள் தங்களிடம் பணத்தை டிபாசிட்டு செய்தோர் திருப்பிக் கேட்கும் போது அதனைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றன. அதனால் தங்களுக்கு தவணைப்படி பணத்தை செலுத்தாத கிருஷிகள் மீது அவை நடவடிக்கை எடுத்துக்கொள்ள நேரிடுகிறது. இப்படிப்பட்ட சம்பவங்கள் மனக்கசப்பை உண்டு பண்ணுகின்றன. பாங்குகள் கொடுத்த பணத்தை வசூலிப்பதில் தங்களின் கடமையைச் செலுத்துவதாகவும், உரிமையைக் கையாள்வதாகவும் கருதுகின்றன. ஆனால் கிருஷிகளோ தாங்கள் வறுமையடைந்துள்ள சமயத்தில் தங்கள் மென்னியைப்பிடித்து துன்புறுத்துவது நீதியாகுமா என்கின்றனர். இதுபோன்ற போராட்டமொன்று பணம் கொடுத்தோர் வாங்கியோர் ஆகிய இருவரிடையே எழுந்துள்ளது. இது காரணமாக பணம் வாங்கியோர் சொத்து பறிமுதல் செய்யப்படவும், அவர்களது வாழ்வு தாழ்மை அடையவும் நேரிட்டுவிட்டது.

### என் செய்வது?

இம்மாதிரியான சமயத்தில் என் செய்வதென்பதே கூட்டுறவாளர் கவலையாகும். கூட்டுறவு இயக்கம் இருப்பதா? இறப்பதா? என்பதை ஆராய்ந்து பார்த்ததில் அவ்வியக்கம் இருந்தாக வேண்டுமென்றும், கிருஷிகளை உய்விக்கக்கூடிய ஒரு இயக்கம் இருக்குமாகில் அத்தகைய இயக்கம் கூட்டுறவு இயக்கத்தைத் தவிர வேறு எதுவும் இருக்கமுடியாதென்றும் திண்ணமாகக் கூறுவேன். எனவே, கூட்டுறவு இயக்கத்தின் கட்டிடம் சிதையாமல் கண் காணிக்கவும்,

அதனை வலுவடையச் செய்வதுமே நமது முதற் கடமையாகும்.

### ஒரு யோசனை

இதுசமயம் நான் ஓர் யோசனை கூறவிரும்புகிறேன். அதாவது, சர்க்கார்மீது கூட்டுறவாளர் கொண்டுள்ள அவநம்பிக்கையை விட்டொழிக்கவேண்டும். கூட்டுறவு இலாக்கா சட்டசபைக்குக் கட்டுப்பட்ட மந்திரிமார்கள் வசமிருக்கின்ற தென்பதை ஞாபகத்தில் கொள்ளவேண்டும். அதிலும், சமீபத்தில் மாகாண சுயஆட்சி கிடைக்கக் கூடுமாகையால் மந்திரிகளை பூரணமாக நம்பவேண்டும். எனவே, இதுவரை இல்லாத சில விசேஷ அதிகாரத்தை கூட்டுறவு ரிஜிஸ்திராருக்கு அளிக்கலாம். இதுவரையில் ஓர் வகையான ஜனநாயக ஆட்சி முறையைக் கூட்டுறவு இயக்கத்தில் கையாண்டு பார்த்தோம். சிறிது காலம் சர்வாதிகார ஆட்சி முறையை அமுலுக்குக் கொண்டுவந்து அதனால் ஏதாவது நன்மை உண்டா என்பதையும் பார்ப்போம். நமக்குத் தெரிந்த அநேக கிராமச்சங்கங்கள் என்ன நல்ல வார்த்தை சொன்னாலும் கேட்பதில்லை. அத்தகைய சங்கங்களுக்கு அவ்வப்போது நல்ல சூடு கொடுத்துவர வேண்டும். ஒழுங்கானபடி வேலை பாராதவர்களும், போதிய நிர்வாகத் திறமையற்றவர்களுமான சங்க ஊழியர்கள் நீக்கப்படவேண்டும்; தயவிற்கும், தாட்சண்யத்திற்கும், சிபார்சுக்கும் கட்டுப்பட்டு வெறும் உதவாக்கரை ஆசாமிகளுக்கெல்லாம் வேலை கொடுப்பதென்ற பழக்கத்தை அறவே ஒழிக்கவேண்டும். சரியானபடி நிர்வாகம் செய்யாத சங்கங்களை கதவடைக்கவேண்டும்.

இறுதியாகக் கூறுமிடத்து, கூட்டுறவு இயக்கத்தின் நோக்கம் இன்னும் போதியவாறு பூர்த்தி அடைவிடினும், லட்சியம் நிறைவேறாவிடினும், இந்நாட்டின் விமோசனம் கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்ததாகவே இருக்கிறது. விவசாயிகள் நிறைந்த இந்நாட்டிற்கு விடுதலை அளிக்கவல்லது கூட்டுறவு இயக்கம் ஒன்றே. கூட்டுறவு இயக்கம் இல்லையேல் கிருஷிகள் இல்லை; கிருஷிகள் இல்லையேல் விவசாயம் இல்லை; விவசாயம் இல்லையேல் ஒன்றும் இல்லை.

## ஐக்கிய அயர்லாந்து

(11-ம் பக்கம் தொடர்ச்சி.)

வியாதியைப் போக்கல், சிக்கனம் முதலியவற்றைப் போதிப்பது ஆகிய வேலைகளை இச்சங்கம் செய்துவருகிறது.

ஐக்கிய விவசாய சங்கம் செய்திருக்கும் வேலைகளை நேரில் பார்த்தாலன்றி பூரா அறிய முடியாது. இவற்றினுக்கெல்லாம் காரணம் முன் சொன்னபடி பொதுஜன ஊழியர் சிலரது உற்சாகமும், உழைப்பும், ஊக்கமுமேயாகும். அவர்களுள் முதலானவர் சர். ஹோரஸ் பிளங்கெட். அவர் இன்னல்களுக்கு அஞ்சாதவரும் இடுக்கண்களுக்கு பின்வாங்காதவருமாவர். தம்மைச்சேர்ந்தோரை தம்மைப்போல் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் உழைக்குமாறு செய்யும் சக்தியுடையவர். அவரைப்போலவே ஜார்ஜ் ரஸ்ஸல், ஆண்டர்சன், நார்மன், ஆகியோர் உழைத்தனர்.



# கூட்டுறவு நாணயமுறை

## பழமையும், புதுமையும்

### கிருஷிகளின் துயரம் ஒழிக!

### வறுமைக்குக்காரணம் வருமானமின்மையே

### வருமானத்திற்கு வழி என்ன?

அவ்வழியைக்காண்பதே கூட்டுறவாளர் வேலை

திரு. ராமதாஸ் பாணம்

அமரோதியில் நடைபெற்ற அகில இந்திய கூட்டுறவு பாங்குகள் மகாநாட்டில் திரு. வி. ராமதாஸ் பந்துலு நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம் பின்வருமாறு:—

1931-ம் ஆண்டில் கடந்த மகாநாடு நடைபெற்றது. அதற்குப் பின்னர் இன்றுதான் நாம் மீண்டும் கூடியுள்ளோம். இதற்கு இடையே உள்ள காலத்தில் கூட்டுறவாளர் பெரும் சோதனைக்காளாகவேண்டியதாகி விட்டது. 1928—29-ம் வருஷம் இந்தியா பூராவும், மாகாணம் தோறும், கூட்டுறவு இயக்கம் உன்னத நிலையை அடைந்திருந்தது. 1929-ம் ஆண்டின் இறுதியில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது முதல் கூட்டுறவு இயக்கத்தின் உன்னத நிலையில் மாறுபாடு ஏற்பட்டது. கூட்டுறவு இயக்கம் 1904-ம் ஆண்டில் நாட்டில் புகுத்தப்பட்டதென்றால், அது முதல் சுமார் 25 ஆண்டுகளில் இவ்வியக்கம் பெரிதும் விருத்தி அடைந்துள்ளது. சுமார் 1,00,000 கிராமச் சங்கங்களும், 600 மத்திய பாங்குகளும், 12 மாகாண பாங்குகளும் நாடெங்கும் நிறுவப்பட்டுள்ளன. இந்த பாங்குகளில் சுமார் 50 கோடி ரூபாய் புரண்டுள்ளது. சுமார் 30 லெட்சம் பேர் பாங்குகளில் அங்கத்தினர்களாக சேர்ந்திருப்பதாகத் தெரிகிறது. கூட்டுறவு நாணயச் சங்கங்கள் மிகவும் பிரதானமான ஸ்தானம் வகிப்பதுடன் பாங்கு முறையில் ஸ்திரமான நிலையை அடைந்து விட்டன.

### இன்றைய நிலை

1929-ம் ஆண்டிற்குப்பின்னர் கூட்டுறவு இயக்கத்திற்கு வீழ்ச்சி எனலாம். இவ்வியக்கத்தின் முற்போக்கு தடைபட்டதுடன் நில்லாது பிற்போக்கு ஏற்பட்டதென்றும் சொல்லலாம். பொதுவாக எல்லா மாகாணங்களிலும் புதிய சங்கங்கள் பதிவு செய்வதில் அக்கரை காட்டப்படவில்லை. ஆனால், கதவடைக்கப்படும் நாணயச் சங்கங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. கிராமச் சங்கங்கள் அங்கத்தினர்களுக்குக் கடன் கொடுப்பதை குறைத்து வருகின்றன. இதற்குக் காரணம் அங்கத்தினர்கள் வாங்கிய கடனை திருப்பிக் கொடாதிருப்பதாகும். கடன் வாங்குவோர் எண்ணிக்கை குறையவே பாங்குகளில் பணத்திற்குப் போக்கிடமற்றுப்போக நேர்ந்தது. டிபாசிட்டு பெறுவது நிறுத்தப்பட்டது. பாங்கின் மூலதனம் குறைந்த வட்டிக்கு கூட்டுறவு இயக்கத்திற்குப் புறம்பான துறைகளில் டிபாசிட்டாகப் போடப்பட்டது. இது காரணமாக பாங்குகளின் லாபம் குறைந்தது. கிராமச் சங்கங்கள், மத்திய பாங்குகள் ஆகியவற்றின் லேவாதேவி குறையவே, லாபம் மட்டுப்படவே, இவை மேம்பார்வை புரிந்துவரும் ஸ்தாபனங்களுக்குக் கொடுத்துவரக்கூடிய பணமும் குறையலாயிற்று. இதனால் இந்த ஸ்தாபனங்கள் பணமுடைக்களாக நேரிட்டது. பழம் பாக்கியை வசூலிப்பதிலும், தங்கிப்போன பாக்கியை புதிய நபர்களை இணைத்து புதுப்பிப்பதிலும், விருத்திக்குவர மார்க்கமுள்ள சங்கங்களை திருத்துவதிலும் கவனஞ் செலுத்தப்படுகிறது.

## கூட்டுறவு நாணயம்

பொருளாதார நெருக்கடியில் மாற்றமேற்பட்டு நாடு சுபேட்சகரமானதாகுமாகில் கூட்டுறவு நாணயம் மேம்படக் கூடுமோவென ஓர்வினு எழலாம். நான் அளிக்கக்கூடியபதில் அவ்வாறு கூடும் என்பதே. ஆனால் அக்காலத்தில் நடந்த முறையில் இனி நடத்திக்கொள்ள முடியாதெனலாம். நாம் கூட்டுறவு நாணய இயக்கத்தைத் துவக்கிய காலத்தில் இரு நோக்கத்தைக் கொண்டிருந்தோம். நமக்கு ஏற்பட்டுள்ள அனுபவத்திலிருந்து நமது நோக்கத்தைப் பூர்த்தி செய்வதில் தவறான முறையைக் கைக்கொண்டோம் என்பதை உணரலாம். கிராம நாணயச் சங்கம் கிருஷிகளின் தேவையைப் பூர்ணமாகப் பூர்த்தி செய்யுமென்றும், அதன்மூலம் கிருஷிகள் மார்வாடிகளின் உதவியை நாடவேண்டிய அவசியமில்லாது போகுமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எதிர்பார்த்தபடி நடக்காது கண்டு கூட்டுறவாளர் குழப்பமடைய நேர்ந்தது. கிராமச்சங்கங்கள் குறுகிய காலதவணையில் பொருள் உற்பத்தியையும், வியாபாரத்தையும் உத்தேசித்து தற்காலிகமாக பொருளுதவி புரிய முடிந்ததேயன்றி நீண்டகால தவணையில் கடன் கொடுக்க முடியவில்லை. குறுகியகால தவணையில் கிருஷிகளுக்குக் கடன் வாங்கவேண்டியதில் உள்ள அவசியத்தைப் போன்று நீண்டகால தவணையில் பணம் மிக மிகத் தேவையாக உள்ளது. இவ்வுண்மையை உணர்ந்தே மத்திய பாங்கு விசாரணைக் கமிட்டியார் நீண்டகால தவணையிலும், குறுகியகால தவணையிலும் கடன் கொடுப்பதென்பது ஒரே கூட்டுறவு ஸ்தாபனத்தின்மூலம் கூடாதென்றும், இரண்டிற்கும் இருவிதமான பிரத்தியேக ஸ்தாபனங்கள் வேண்டும் என்றும் கூறியுள்ளனர். கூட்டுறவு நாணய இயக்கத்தில் கவனிக்கத்தக்க தொன்றுள்ளது. அதாவது, கிருஷிகளின் கடன் சுமைக்குக் காரணம் வறுமை என்றும், அவர்களது செல்வ நிலை மேம்பாடடைய வேண்டுமானல் கூட்டுறவு நாணயச்சங்கங்களின்மூலம் கடன் சுமையைக் குறைப்பதுதான் தக்கவழி என்றும் ஓர் அபிப்ராயம் இருந்துவருகிறது. ஆனால் உண்மை வேறு. இந்தியக் கிருஷிகளின் வறுமைக்குக் காரணம் வெறும் கடன் சுமை என்று சொல்வதைக் காட்டிலும், அக்கடன் சுமைக்குக் காரணம் என்ன என்று பார்த்தால் அதுவே வறுமையில் வந்து விடிந்தது என்பது விளங்கும். சென்ற சில ஆண்டுகளாக கிருஷிகளின் கடன் சுமை அதிகரித்திருக்கிறது. அதிலும் அவர்கள் விவசாயத்தையே பெரிதும் நம்பி இருப்பதாலும், குடிசைத்தொழில்கள் நசித்துப் போனமையாலும், வரியின் பெருக்காலும், விலைவாசிக் குறைவாலும் அவர்களது கடன் பெருகிக் கொண்டே போகிறது. இம்மாதிரியான கடன் சுமையைத் தடுக்கவோ அல்லது குறைக்கவோ கூட்டுறவு நாணய இயக்கம் ஒன்றினால் மாத்திரம் முடியாதெனலாம். நாம் இதுவரையில் கையாண்டுவந்த முறையைவிட்டு புதிய வழியில் நடக்க வேண்டும். குறுகியகால தவணையிலும், நீண்டகால தவணையிலும் கடன் கொடுக்கும் சங்கங்கள் தனித்தனியே ஸ்தாபிக்கப்படவேண்டும். இவ்விரு ஸ்தாபனங்களும் ஒத்துழைக்க வேண்டியது அவசியமில்லை என்றோ அல்லது ஒத்துழைக்க முடியாதென்றோ நான் கூறவில்லை. பொதுவாகக் கூட்டுறவு இயக்கத்தின் வெற்றி இவ்விரண்டின் ஒத்துழைப்பைப் பொறுத்ததாக இருக்கிறது.

கிராமச்சங்கங்கள், ஜில்லா பாங்குகள், மாகாண பாங்குகள் ஆகியன கிருஷிகளின் விவசாயத்திற்கும், வியாபாரத்திற்கும் பருவகாலத்தை அனுசரித்து தற்காலிகக் கடன் கொடுப்பதென்ற வழக்கத்தைக் கொள்வதே சிலாக்கியம். சாகுபடியின் பொருட்டு கிருஷிகளுக்குக் குறுகியகால தவணையில் கடன் கொடுத்து உதவுவதின்மூலம் கிருஷிகளின் செல்வ நிலை விருத்தியடையுமென்றும், வாழ்க்கை மேம்பாடடையுமென்றும் மத்திய மாகாண கூட்டுறவு ரிஜிஸ்திரார் 1932-ம் ஆண்டின் அறிக்கையில் கண்டிருப்பதை நான் ஆதரிக்கிறேன். கூட்டுறவு இயக்கம் கிராமாந்திரங்களில் குடிசைத்தொழில்களை புதுப்பிப்பதில் கவனத்தைச் செலுத்த வேண்டும். இதன்மூலம் கிருஷிகளின் ஓய்வு காலத்தை வருமானத்திற்குரியதாகச் செய்யலாம். இப்பணியை இதற்காக அமைக்கப்பட்ட தனித்த பாங்குகளோ அல்லது நகர பாங்குகளோ செய்யலாம். இதன்மூலம் பொருள் உற்பத்தித் துறையில் கூட்டுறவு இயக்கம் உதவி புரிய முடியும்.



# கரூர் சௌத் கூட்டுறவு யூனியன்

## ஆறுவது ஆண்டின் அறிக்கை

கரூர் சௌத் யூனியன் திரு பி சுப்பராயக் கவுண்டர் அவர்களை தலைவராகவும், திரு. வி குப்பமுத்துப் பிள்ளை அவர்களை காரியதரிசியாகவும் கொண்டுள்ளது.

1–7–32 முதல் 30–6–33 தேதியோடு முடிவான 1932–33-ம் ஆண்டு நடப்பு விபரம் நிர்வாக சபையார் வெளியிட்டுள்ள அறிக்கையின் மூலம் தெரிவதாவது :—

### யூனியன்

இந்த யூனியன் 23–2–28-ல் பதிவு செய்யப்பட்டு 26–2–28-ல் வேலை துவக்கப்பட்டது.

### அணைக்கப்பெற்ற சங்கங்கள்.

ஆண்டின் தொடர்ச்சியில் 15 சங்கங்கள் இருந்தன; நடப்பு ஆண்டில் புதிதாக ஒன்றும் ஏற்படுத்தப்படவில்லை. ஆண்டின் இறுதியிலும் 15 சங்கங்களே உள்ளன.

### கழகத்தின் நிர்வாகம்

சங்கங்களால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட பிரதிநிதிகளில் ஏழு கனவான்கள் பொறுக்கி எடுக்கப்பட்டு அன்னவர்களால் கழகம் நடத்தப்பட்டு வருகிறது. இச்சபை பிரஸ்தாப ஆண்டில் 11 தடவைகள் கூடி சங்கக்காரியங்களை ஆராய்ச்சி செய்திருக்கின்றது. இதில் ஒரு சபை கோரமில்லாமல் நடைபெறவில்லை. தவிர சங்கப்பிரதிநிதிகள் மகாசபை கூட்டம் இரண்டு கூடி விஷயங்களை ஆராய்ச்சி செய்திருக்கின்றனர். பிரஸ்தாப ஆண்டில் கூட்டப்பட்ட நிர்வாக சபை கூட்டங்களில் நான்கு கூட்டங்கள் நரிகட்டியூர், பசுபதிபாளையம், ஆண்டாங்கோவில், செட்டிபாளையம் சங்கங்களிலும் கூட்டப்பட்டு சங்கத்தின் முன்னேற்றம், வசூல் வேலை, பஞ்சாயத்தார்களின் பயிற்சி முதலியவைகளைக் கவனிக்கப்பட்டன.

### கழகத்தின் சிப்பந்திகள்

பிரஸ்தாப ஆண்டில் இக்கழகத்தில் ஓர் சூபர்வைஸரும், ஓர் குமஸ்தாவும், ஓர் சேவகனும் வேலை பார்த்து வந்தார்கள். சூபர்வைஸர் அணைக்கப்பெற்ற சங்கங்களை தகுந்தவாறு பல தடவைகளில் சென்று பார்வையிட்டு, தணிக்கை செய்தும் வசூல் விஷயத்தில் விசேஷ சிரத்தை காட்டியும் வந்திருக்கிறார். பிரஸ்தாப ஆண்டில் சிப்பந்திகளின் வேலை மிகவும் திருப்திகரம்.

### கழக வருமானம்

நமது ஜில்லாவிலுள்ள எல்லா மேற்பார்வைக் கழகங்களையும் ஜில்லா ஐக்கிய மேற்பார்வைக் கூட்டுக்கழகத்துடன் அணைக்கப்பெற்றிருப்பதால் சங்கங்கள் செலுத்த வேண்டிய மேற்பார்வைக் கட்டணம் பூராவும் டிை கூட்டுக்கழகத்தின் கணக்குப்படி ஜில்லா பாங்கியால் வசூலிக்கப்பட்டு மூன்று மாதத்திற்கொருமுறை ஒவ்வொரு கழகத்திற்கும் வீதாசாரமாகக் கொடுக்கப்பட்டு அதன் மூலம் நிர்வாகம் நடைபெற்று வருகிறது. நடப்பு ஆண்டில் சங்கங்களிலிருந்து வசூலாக வேண்டிய மேற்பார்வைக் கட்டணம் ரூபாய் 1374–0–0 பூராவும் பாக்கியன்னியில் வசூலிக்கப்பட்டிருக்கிறது.

### சங்கங்களின் அங்கத்தினர்கள்

பிரஸ்தாப ஆண்டின் ஆரம்பத்திலிருந்த 901 அங்கத்தினர்களில் 137 நபர்கள் இயக்கத்திலிருந்து விலகி வருஷ இறுதியில் 764 அங்கத்தினர்களே இருந்திருக்கின்றனர். சங்கங்களில் தவணை கடந்த நபர்களை விலக்கப்பட்டிருப்பதால் இந்தக்குறைவு ஏற்பட்டிருக்கிறது. சங்கங்களின் நிர்வாகிகள் கிராமங்களில் ஐக்கிய தத்துவத்தைப் பரப்பி இன்னும் அநேக கிராமவாசிகளை ஐக்கிய முறையில் ஈடுபடுத்தி அதன் பலனை அடையும்படி செய்து சங்கங்களை மென்மேலும் விருத்திக்குக் கொண்டு வருவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

### அங்கத்தினர்களின் பங்கு மூலதனம்

பிரஸ்தாப ஆண்டின் ஆரம்பத்தில் சங்கங்களின் அங்கத்தினர்களின்பேரில் நிலுவையாயிருந்த தொகை ரூ. 37199–9–0 உடன் நடப்பு

வருஷத்தில் ரூ. 927 சேர்ந்தது. இவற்றில் வாபீஸ் செய்யப்பட்டது ரூ. 6284-9-0. ஆகவே வருஷக்கடைசியில் ரூ. 31842 மட்டும் நிலுவை நின்றது. சென்ற ஆண்டைக் காட்டிலும் ரூபாய் 5357-9-0 குறைந்திருக்கிறது.

**பங்குத்தொகை தவணை பாக்கி, வசூல் விபரம்**

வருஷ ஆரம்பத்தில் தவணைப்படி வசூலாக வேண்டிய பங்குத்தொகை ரூ. 2750-ல் ரூ 927 மட்டிலும் வசூலிக்கப்பட்டு ரூ. 1823 பாக்கி நின்றுவிட்டது. இதில் ரூ. 1047 உப்பிடமங்கலம் சங்கத்திலிருந்தும் ரூ 721 வெள்ளியணை சங்கத்திலிருந்தும் ரூ. 55 ஜெகதாபி சங்கத்திலிருந்தும் வசூலாக வேண்டியது. இம்மூன்று சங்கங்களின் நிர்வாகிகள் நடப்பு ஆண்டிலாவது பாக்கியில்லாமல் வசூலித்து விடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தவிரவும் வரையறுக்கப்படாத நாணயச் சங்கங்களுக்கு இம்மூலதனமே முக்கியமான திரவியமென்பதை ஏற்கனவே எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. சங்க அதிகாரிகள் இதை நன்குணர்ந்து இம்மூலதனத்தை மென்மேலும் விருத்திக்குக் கொண்டு வருவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

**சங்கங்கள் எடுத்திருக்கும் பங்குத்தொகை**

சங்கங்களின் அங்கத்தினர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட மூலதனத்தில் திருச்சி ஜில்லா அர்பன் பாங்கில் 38 பங்குகளின் பேரில் ரூபாய் 1900-ம் கரூர் தானியக் கொதுவை சங்கத்தில் 157 பங்குகளின்பேரில் ரூ. 1570-ம் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது.

**கடன் பாக்கி**

சென்ற வருஷத்தைக்காட்டிலும் கடன்களின் பாக்கி ரூ. 9699 அதிகரித்திருக்கிறது. சென்ற மூன்று வருஷங்களாகவே பாங்கின் தவணை கடந்த கடன்கள் அதிகரித்து வந்திருக்கிறது. பண நெருக்கடி, மாசூலுக்கு நல்ல விலையில்லாதது முதலிய பல காரணங்கள் ஏற்பட்டிருந்தாலும், சங்கம் நிர்வாகிகள் பன்முறைகளில் விசேஷ சிரத்தையுடன் அடுத்த ஆண்டிலாவது பாக்கிகளைக் குறைத்து சங்கத்திற்கு நல்ல பெயரும், யூனியனுக்கு கௌரவத்தையும் சம்பாதித்துக் கொடுப்பார்களென எதிர் பார்க்கப்படுகிறது

**தாவாக்கள்**

வருஷ ஆரம்பத்தில் சங்கங்களில் மத்தியஸ்தர் கோர்ட்டு டிகிரிகள் 28 இருந்தன. பிரஸ்தாப ஆண்டில் மத்தியஸ்தர் கோர்ட்டு டிகிரிகள் 79-ம் பெறப்பட்டன. மொத்த டிகிரிகள் 107-ல் பிரஸ்தாப ஆண்டில் 26 டிகிரிகள் நிறைவேற்றப்பட்டும், 81 டிகிரிகள் நடவடிக்கை எடுக்கப்படாமலும் இருந்தன.

சென்ற ஆண்டைக்காட்டிலும் நடப்பு வருஷத்தில் அதிக டிகிரிகள் ஏற்பட்டு வசூலாகாமல் பாக்கியிருக்கின்றன. சங்கம் நிர்வாகிகள் டிகிரிகளின்பேரில் அப்போதைக்கப்போது தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு பாக்கியன்னியில் வசூலிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**சங்கங்களின் லாபம் நஷ்டம்**

கழகத்தில் அணைக்கப்பெற்ற 15 சங்கங்களில் 9 சங்கங்கள் (அதாவது, மள்ளமருதபட்டி, உப்பிடமங்கலம், ஜெகதாபி, ஏமூர், பள்ளபாளையம், காளியப்பகவுண்டனூர், திருமாநிலையூர், திருமலைநாதன்பட்டி, நரிகட்டியூர் சங்கங்கள்) மட்டிலும் லாபத்தில் வேலை செய்திருக்கின்றன. பாக்கியுள்ள சங்கங்கள் நஷ்டமடைந்ததற்கு சங்கம் நிர்வாகிகள் சங்கம் அங்கத்தினர்களின் வட்டி பாக்கியை பூராவும் வசூல் செய்யாததே காரணமாகும். அடுத்த ஆண்டிலாவது சங்கம் நிர்வாகிகள் தகுந்த முயற்சியுடன் வட்டியை பாக்கியன்னியில் வசூலித்து லாபம் அடையும்படி செய்வார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

**க்ஷேமநிதி**

வருஷக்கடைசியில் சங்கங்களின் மொத்த க்ஷேமநிதி ரூ. 20364. இதில் ரூ. 17722-14-0 மட்டிலும் ஜில்லா பாங்கில் செலுத்தப்பட்டிருக்கிறது. பாக்கி ரூ. 2641-2-0 இன்னும் செலுத்தப்படாமல் தவணை கடந்திருக்கிறது. பாக்கியைச் செலுத்துவதற்கு சங்கம் நிர்வாகிகள் முயற்சி எடுத்துக்கொள்வார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது

**லேவாதேவி**

பிரஸ்தாப வருஷத்தில் சங்கங்களின் லேவாதேவி ரூ. 287964-லிருந்து ரூ. 237979-க்கு குறைந்திருக்கிறது. சங்கம் நிர்வாகிகள் லேவாதேவிகளை தேவைக்குத் தக்கவாறு விருத்தி செய்வார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.



**சிப்பந்தி செலவுகள்**

சங்கங்களின் மொத்த லேவாதேவித் தொகை ரூ. 237979-க்கு சிப்பந்தி சாதல்வார் செலவுக்காக ரூ. 1538 செலவழிக்கப்பட்டிருக்கிறது. இத்தலைப்பில் 100-க்கு ரூ. 0-10-4 வீதம் செலவாகி யிருக்கிறது. சென்ற வருஷத்தைவிட பிரஸ்தாப ஆண்டில் 100-க்கு ரூ. 0-7-1 குறைவுபட்டிருக்கிறது.

**பொது**

இக்கழகத்தில் அணைக்கப்பட்டுள்ள சங்கங்கள் பலவற்றிலும் அங்கத்தினர்களால் ஷை சங்கங்களுக்கு செலுத்தப்படவேண்டிய கடன்கள் பல கெடுக்கடந்திருக்கின்றன. இந்நிகழ்ச்சிக்குக் காரணம் தற்காலத்தில் யாராலும் பொதுவாகப் பேசப்பட்டு வரும் உலகப் பொருளாதார நெருக்கடி என்றும், அகவிலை குறைவு என்றும் கூறப்படுவன சிறிதளவே காரணமாய் இருப்பினும், முக்கியமாய் சங்கங்களின் நிர்வாகிகளே பொறுப்பாளிகள் எனக்கூறுவது மிகையாகாது. எவ்வாறெனின் சங்கங்கள் பலவற்றில் பொறுப்பு வாய்ந்த பஞ்சாயத்தார்களே ஏனையோருக்கு வழிகாட்டியாய் இராமல் கெடுக்கடந்த பாக்கியாளர்களாய் இருப்பதும், சங்கங்களின் காரியங்களை ஆற்றுவதில் ஊக்கம் குன்றி இருப்பதும், குறைகள் பலவற்றை அறவேயொழித்து சீர் செய்ய முன்வாராது வாளாயிருப்பதும், தகுதியான கேஸ்களில் கெடு நீடித்து வாங்காதிருப்பதும், ஏனையவும் பிறவுமாம்.

மேற்கூறியுள்ளவற்றின் காரணமாகவே ஜில்லா பாங்காருக்கு சங்கங்கள் யாவும் தங்கள் தங்கள் பாக்கிகளை அவ்வக்கெடுக்களில் செலுத்தத் தவறவே ஜில்லா பாங்குக்கெடுக்கடந்த தொகை அதிகரிக்க ஏதுவாயிற்று.

ஆகவே சங்கங்களின் நிர்வாகிகள் இந்த யூனியனுக்கு நற்பெயர் உண்டாக்க பின்வாங்க மாட்டார்களெனின் அவரவர் சங்கங்களில் ஊக்கத்துடன் ஆன பணிகள் பல இயற்றவும் தயங்கார் என்றே பெரிதும் நம்பப்படுகிறது.

## திருச்சி
## யௌவன கூட்டுறவாளர் சங்கம்

இச்சங்கத்தின் கூட்டமொன்று ஜூன்-மீ 25உ திரு. எஸ். ஜே ரெத்தினசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சங்கத் தலைவர் திரு. பி பி. கே. ராஜா சிதம்பரம் தமது பதவியை ராஜிநாமா செய்தமையால் சென்னை திரு வி. பாசுதேவ் பி.ஏ., பி.எல்., எம் எல்.ஸி அவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு. என் எஸ் கோவிந்தசாமி "ஐக்கிய அரசு" சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியர் பதவியை ஏற்றதின்பேரில் காலியான காரியதரிசி ஸ்தானத்திற்கு திருச்சி நகர கூட்டுறவ பாங்கின் மானேஜிங் டைரக்டர் திரு டி. பி குருசாமி பிள்ளை அவர்கள் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு டி. ஆஸ்டின் அவர்கள் கூட்டுறவு இலாக்கா ரிஜிஸ்திராராக நியமிக்கப்பட்டதைப் பாராட்டி ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. யௌவன கூட்டுறவாளர் மகாநாட்டை டிசம்பர்-மீ திரு. வி. டி. நாயகம் அவர்கள் தலைமையில் நடத்துவதென்றும், கூட்டுறவு ரிஜிஸ்திரார் திரு. டி. ஆஸ்டின் அவர்களைக்கொண்டு மகாநாட்டைத் திறந்து வைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

தலைவர் அவர்களுக்கு வந்தனோபசாரம்கூற கூட்டம் கலைந்தது.

---

**தானியக்கொதுவை விற்பனை சங்கம்**

தானியக்கொதுவை விற்பனை சங்கம் புனர் உத்தாரணம் செய்யப்பட்டு வேலை செய்து வருகிறது. அணைக்கப்பட்டுள்ள சங்கங்கள் மெம்பர்களுக்குத் தேவையான சாமான்களை கூட்டாக கொள் முதல் செய்தும் அங்கத்தினர்களின் விளை பொருள்களை ஷை சங்கம் மூலம் விற்பனை செய்தும் தானியக்கொதுவை விற்பனை சங்கத்தை அபிவிருத்தி செய்யுமாறு சங்க நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# உங்களுக்கு என்ன வேண்டும்?

லெட்டர் பேப்பர்களா?

கவர்களா?

பில் புத்தகங்களா?

துண்டுப் பிரசுரங்களா?

வருடாந்திர அறிக்கைகளா?

கல்யாணக் கடிதங்களா?

குறைந்த சார்ஜ்! சிறந்த வேலை!

தேவையானவற்றிற்கு எழுதவும்.

148730

## வியாபாரம் பெருக வழி விளம்பரம் செய்தல்.


"ஐக்கிய அரசு" கூட்டுறவாளரால், கூட்டுறவாளருக்காக, கூட்டுறவு இயக்க வளர்ச்சியை உத்தேசித்து நடத்தப்படும் மாத சஞ்சிகை. இப்பத்திரிகையில் விளம்பரஞ் செய்தால் வியாபாரிகள் விசேஷ பலனடையலாம்.

நீண்டகால விளம்பரங்களுக்கு பிரத்தியேக சலுகை காட்டப்படும்.

விலாசம்:—

நிர்வாக ஆசிரியர், "ஐக்கிய அரசு"

29, கீழ ஆண்டார்வீதி, தெப்பக்குளம், திருச்சி.




A marvellous Balm.
FOR CHILDREN
குரு தைலம்

We are
Gold Medalists
in
all the Exhibitions
from 1916
onwards.



GURU
Whooping Cough
Specific
I am so happy.
In 8 days
my Child is
Free

சஞ்சீவி குழந்தைகளுக்கு சஞ்சீவி

குரு மருந்துகளை வெல்ல வேறு மருந்து கிடையாது.

அனுபோகத்தில் காணலாம்.



குரு பால் பவுடர்.

குரு
மருந்துசாலை,
திருச்சினப்பள்ளி



குரு சந்தான சொர்ணம்
ஸ்திரீகளுக்கு சஞ்சீவி.

பதிவு எண் :



# குரு மருந்துகள்

எப்போதும் தங்க மெடல்களே பரிசு பெற்று வருகிறது.

## குழந்தை மருந்துகள் மிக விசேஷமானது.

குருமருந்துகள் உபயோகமாகாத வீடுகள் கிடையாது

(1) குரு கோரோஜனை மாத்திரை—மலத்தைக் கழித்து வியாதியை போக்கும்

(2) குரு கஸ்தூரி காரமாத்திரை

(3) குரு தைலம்—மகா சஞ்சீவியாக விளங்குகிறது.

(4) குரு பால் பவுடர்—மாட்டுப்பாலை தாய்ப்பாலுக்குச் சமானமாக்குகிறது

(5) குரு பாலர் டாணிக்—ரத்தவிர்த்திக்கு சஞ்சீவி

(6) கக்குவானுக்கு குரு K. சொட்டு மருந்து—கைகண்டது

(7) குரு ஜீமா கழிம்பு—சகல கரப்பான்களுக்கும்

(8) சகலரண கழிம்பு—சகலவிதப் புண்பொடிகளுக்கு

(9) வயிற்றுக் கடுப்பு மருந்து

(10) தேரை நோய்—எலும்புருக்கி நோய்க்கு.

(11) குழந்தைகள் வயிற்றுக் கட்டிக்கு

(12) கெற்ப ஊரல் என்கிற கிரந்தி ரோகத்துக்கு

☞ குழந்தைகளுக்கு இன்னும் மிக அருமையான மருந்துகள் இருக்கிறது.

தங்க மெடல் பரிசுகள்—உயர்ந்த நற்சாட்சியங்கள்
சதா பெற்று வருகிறது.

டாக்டர் ஏ. மதுரம், திருச்சி

Printed and Published by Dr. A. Mathuram at the Guru Medical Hall Press, Trichinopoly.